30TH MARCH 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 74 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com




வாசகர்களுக்கு நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

# காஸாவில் இஸ்ரேல் காட்டுமிராண்டித்தனம்; தரைப் படைத் தாக்குதலுக்கு ஆயத்தம்

- மத்திய கிழக்கு யுத்தமாக மாறும் அபாயம்!
- அமெரிக்க இலக்குகள் குறி வைக்கப்படும்!!
- ஈரான் எச்சரிக்கை!!!

(சிறப்பு நிருபர்.என்.எம் . முஹம்மத்)

காஸா யுத்தம் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனைத்து காஸா மக்களையும் காஸாவை விட்டு வெளியேற்றி அதை ஒரு சுற்றுலாத்தலமாக மாற்றுவதை இலக்காகக் கொண்டு இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இதேவேளை இந்த போராட்டத்தை உலக நாடுகள் உடனடியாக தலையிட்டு நிறுத்துமாறு ஹமாஸ் அமைப்பு வேண்டுகோள் விடுத்தாலும் இதுவரை எந்த முஸ்லிம் நாடும் இதற்குரிய ஆயத்தங்களை செய்வதாக தெரியவில்லை.

தற்பொழுது காஸாவில் கிழக்கு, மேற்கு, தெற்கு என எல்லா திசைகளிலும் மக்கள் மீது மிக மோசமான தாக்குதல் நடைபெறுகின்றது. சிறுவர்களும் பெண்களும் கொத்து கொத்தாக கொலை செய்யப்படுவதுடன் ஹமாஸ் அமைப்பினுடைய முக்கிய தலைவர்களும் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் அமைப்பின் தலைவர்களின் இருப்பிடத்தை காட்டி கொடுத்ததற்காக இஸ்ரேலிய உளவாளிகள் ஆறு பேரை நேற்றைய தினம் ஹமாஸ் அமைப்பு தூக்கிலிட்டமை குறிப்பிடத்தக்கது.

04ம் பக்கம்பார்க்க...

## ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டது நாளை இலங்கையில் நோன்புப் பெருநாள்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

உப பிறைக் குழுக்களின் அறிக்கையின் படி, 2025 மார்ச் மாதம் 30ஆம்

05ம் பக்கம்பார்க்க...

## ருஷ்தியின் கைது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளிட்டுள்ள அறிக்கை

22.03.2025அன்று கொழும்பில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்த 22 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக சமூக ஊடகங்களில்

05ம் பக்கம்பார்க்க...

## வெள்ளியன்று இலங்கை வரும் இந்தியப் பிரதமர் மோடி!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இதன்போது எரிசக்தி இணைப்பு, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் மானிய உதவி தொடர்பான

02ம் பக்கம்பார்க்க...



## உள்ளூராட்சி அதிகாரங்களையும் எம்மிடம் ஒப்படையுங்கள்

பெலியத்த கூட்டத்தில் ஜனாதிபதி அறைகூவல்

நாடு நல்லதொரு எதிர்காலத்திற்கு வழிவகுக்கும்

என்ற நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை நாம் உருவாக்கியுள்ளோம். அரசாங்கம் என்பது என்னவென பிரஜைகளுக்கு இந்நாட்டில் நாம் முன்னுதாரணம் காட்டி வருகிறோம். எமக்கு நாட்டு மக்களுடன் மாத்திரமே தொடர்பு உள்ளது.

எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தை மக்கள் மீண்டும் தவற விட மாட்டார்கள் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த நாட்டை கட்டியெழுப்ப அவசியமான பொறிமுறையை நாம்

03ம் பக்கம்பார்க்க...



## சுதந்திர ஊடகங்களை நசுக்க அரசு பிரயத்தனம்

எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

தற்போதைய ஜே.வி.பி அரசாங்கம் ஊடகங்களுடன் நல்லுறவைப் பேணி அரசியல் பரப்பில் உச்சத்தை தொட்டனர்.

ஜே.வி.பியை வலுப்படுத்துவதற்கும் பிரபலப்படுத்துவதற்கும் எமது நாட்டின் சுதந்திர ஊடகங்கள் பாரிய

02ம் பக்கம்பார்க்க...

## ருஷ்தியை உடனடியாக விடுவிக்குமாறு என்.பீ.பீ.வேட்பாளர்கள் வேண்டுகோள்

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ருஷ்தி என்ற இளைஞரை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தேசிய மக்கள் சக்தி சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்


02ம் பக்கம்பார்க்க...

## முஸ்லிம் பாடசாலைகளுக்கு செவ்வாய் விடுமுறை

ரமழான் பண்டிகைக்காக அனைத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கும் 31ஆம் திகதி விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

தற்போது மேலதிகமாக ஏப்ரல் முதலாம் திகதியும் குறித்த பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

02ம் பக்கம்பார்க்க...



## சீ.ஐ.டி.யில் ஆஜராகுமாறு டிரானுக்கு அழைப்பாணை

முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நாளை (31) காலை 10 மணிக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு

02ம் பக்கம்பார்க்க...

## மியன்மாரை உலுக்கிய பூகம்பம்; 1700 க்கும் அதிகமானோர் பலி

மியன்மாரில் பதிவான நிலநடுக்கம் காரணமாக 1700 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு இராணுவத் தலைவரை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

மண்டலே நகரத்திலிருந்து சுமார் 17.2 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்த

02ம் பக்கம்பார்க்க...

## ஏப்ரல் 16ம் திகதி முதல் வாக்காளர் அட்டை விநியோகம்

உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் ஏப்ரல் 16 ஆம் திகதி

02ம் பக்கம்பார்க்க...



## மியன்மாரை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நிலஅதிர்வு பதிவானது.

தாய்லாந்திலும் இந்த நிலஅதிர்வு உணரப்பட்ட நிலையில் பேங்கொக்கில் உயரமான கட்டிடமொன்று இடிந்து வீழ்ந்ததில் கட்டுமானத் தொழிலாளர்கள் காணாமற் போயுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் மண்டலே நகரிற்கு அருகே 5.1 ரிக்டர் அளவில் புதிய நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மியான்மாரின் ஒரு நூற்றாண்டில் ஏற்பட்ட மிக சக்திவாய்ந்த நிலநடுக்கங்களில் ஒன்றான 7.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் வெள்ளிக்கிழமை தென்கிழக்கு ஆசிய நாட்டை உலுக்கியது.

இதன்காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் 3,408 பேர் காயமடைந்துள்ளனர்.

மியன்மாரில் பாலங்கள், நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள் மற்றும் ரயில்வே உள்ளிட்ட முக்கியமான உட்கட்டமைப்புகள் சேதமடைந்துள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

மியான்மார் மற்றும் தாய்லாந்தில் மீட்பு பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் பேரழிவைத் தடுப்பதில் மருத்துவப் பொருட்களின் கடுமையான பற்றாக்குறை தடையாக இருப்பதாக ஐ.நா எச்சரித்துள்ளது.

## சி.ஐ.டியில்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மாத்தறை வெலிகமவில் உள்ள ஹோட்டலுக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜென்ட் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காகவே டிரான் அலஸுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

## சுதந்திர...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பங்காற்றியுள்ளன.

எதிர்க்கட்சியில் இருந்த போது ஊடகங்கள் மீது ஜே.வி.பி கொண்டிருந்த அணுகுமுறையும், ஆளுந்தரப்பாக கொண்டிருக்கும் அணுகுமுறையும் வேறுபட்டது. அரசாங்கமும், மக்கள் விடுதலை முன்னணி கட்சி அலுவலகத்தின் உத்தரவுகளின் பிரகாரம் ஊடகங்கள் நடந்து கொள்ள வேண்டிய நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு செயற்படாத ஊடகங்கள் சேறுபூசும் ஊடகங்கள் என குத்திரை குத்துகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் எமது நாட்டின் சுதந்திர ஊடகங்களை அகௌரவப்படுத்துகிறது. உண்மையை மக்களிடம் கொண்டு செல்வதற்காக சுதந்திர ஊடகங்கள் காணப்படுகின்றன. இந்த சுதந்திர ஊடகத்தை அவ்வாறே பேணுவது ஜனநாயகத்தை பாதுகாக்கும் பெரும் கருவியாகும். இன்று சுதந்திர ஊடகங்கள் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் பேசும் போது, உண்மையான செய்திகளை வெளியிடும் போது, அரசாங்கமும் மக்கள் விடுதலை முன்னணி கட்சி அலுவலகமும் தடமாறி வருகின்றன. அரசாங்கம் மற்றும் பெலவத்தை கட்சி அலுவலகத்திற்கு எதிராக செய்திகளை வெளியிடும் போது ஊடகங்களை இவர்கள் அகௌரவப்படுத்தி நடந்து வருகின்றனர். சுதந்திர ஊடகம் கட்சி நலனுக்கு அப்பாற்பட்டது. அது உண்மையையே சொல்லும் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டுக்காகவும், இராணுவ வீரர்களுக்காகவும் பேச ஊடகங்களுக்கு உரிமை உண்டு. இது சாதாரண மக்களின் உரிமையும் கடமையும் கூட. சர்வதேச ரீதியில் இராணுவ வீரர்களுக்கு தீங்கு விளைவிக்கும் தீர்மானங்கள் எடுக்கப்படும் போது சிலர் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் மொறட்டுவை வட்டார வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

## ருஷ்தியை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

அக் கட்சியின் தலைமைத்துவத்தை வலியுறுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிட்டம்புவையைச் சேர்ந்த ருஷ்தி என்ற இளைஞர் கொம்பனித்தெருவிலுள்ள அங்காடியொன்றில் வேலை செய்த போது அங்கு இஸ்ரேல் எதிர்ப்பு ஸ்டிக்கர் ஒன்றை ஒட்டியதாக கைது செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் பிரமுகர்கள் இவரை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தலைமைத்துவத்தை கேட்டுள்ளதாக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரொருவர் தெரிவித்தார்.

இதேவேளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவரது கைது குறித்து ஆட்சேபனைகளும்,எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. கொழும்பில் பொலிஸ் தலைமையகத்துக்கு முன் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இவரை விடுதலை செய்யுமாறு கோரி பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் இப்லால் மௌலவி தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது குறித்து பொலிஸார் இவரை விசாரணைக்கு உட்படுத்திய உள்ளனர்.இது தொடர்பான தகவல்களை அவரிடம் கேட்டுப் பெற்றுள்ளனர். இதேநேரம் சனிக்கிழமை ருஷ்தியின் குடும்பத்தினர் இரகசியப் பொலிஸ் தலைமையத்துக்குச் சென்று அவரை சந்தித்துப் பேசியுள்ளனர்.ருஷ்தி திருப்திகரமான நிலையிலுள்ளதாக அவரது குடும்ப உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

ருஷ்தி தொடர்பாக ஆரம்பத்திலிருந்த சந்தேகங்கள் நீங்கியிருப்பதாகவும் இவர் மனோ ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளாரா என்பது குறித்து விசாரணை நடாத்தும் பொலிஸார் கவனம் செலுத்தி வருகின்றனர்.

22 வயதுடைய ருஷ்தியின் பின்னணியில் இந்த செயலுக்கு எவரும் உடந்தையாக இருக்கின்றார்களா இரகசியப் பொலிஸார் இவரிடம் துருவித் துருவி விசாரித்துள்ளனர்.

எனினும் ருஷ்தி தானாகவே இதைச் செய்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வாக்காளர்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆரம்பிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 20 மற்றும் 27 ஆகிய இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகிப்பதற்கான விசேட நாட்களாகக் கருதப்படும் எனவும் இந்த நடவடிக்கைகள் ஏப்ரல் 29 ஆம் திகதி வரை தொடரும் என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏப்ரல் 16 ஆம் திகதி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்காக தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளது.

இதற்கிடையில், உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் வாக்குச் சீட்டுகள் ஏப்ரல் 7 ஆம் திகதி தபால் நிலையத்திற்கு வழங்கப்படவுள்ளதுடன் இந்நடவடிக்கைகள் விசேட பொலிஸ் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## வெள்ளியன்று...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுமென இந்திய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

நேற்று (28) நடைபெற்ற சிறப்பு செய்தியாளர் சந்திப்பில் கலந்தகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

மேலும் இந்த விஜயத்தின் போது சம்பூர் சூரிய சக்தி திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவிலும் இந்தியப் பிரதமர் கலந்து கொள்வார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் 2024 டிசம்பரில் புது தில்லிக்கு அவரது முதல் வெளிநாட்டுப் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அதேபோன்று ஜனாதிபதி திசாநாயக்கவால் விருந்தளிக்கப்படும் முதல் வெளிநாட்டுத் தலைவராக இந்திய பிரதமர் மோடி இடம்பிடித்துள்ளமை விசேட அம்சமாகும்.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் தங்கள் இருதரப்பு உறவுகளில் இணைக்கும் முக்கியத்துவத்தை இந்த விஜயம் பிரதிபலிக்கின்றது என்றார்.


**அசுர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு: 070 2397210**



## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுப்படுத்த வேண்டும். நாட்டை முன்னோக்கி நகர்த்தும் இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பெற்று தர வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் "வெற்றி நமதே- ஊர் எமதே" வெற்றிகரமான மக்கள் பேரணித்தொடர் நேற்று சனிக்கிழமை (29) பெலியத்த பிரதேச சபை மைதானத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி,

அரசியலிலும் பொருளாதாரத்திலும் திருப்பத்தை ஏற்படுத்த நாட்டு மக்கள் புதிய அரசாங்கம் ஒன்றை தோற்றுவித்தனர். ஆனால் அரசாங்கத்துக்கு எதிராக ஒரு சிறு குழுக்கள் விமர்சனங்களை முன்வைத்து கொண்டிருக்கிறது.

ஆனால் அந்த தரப்பினர் இங்குள்ள கிராமங்களுக்கு வருகை தருகின்றனரா? இல்லை. அவர்கள் எங்கிருக்கிறார்கள்? தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்து கொண்டு உரையாற்றி கொண்டிருக்கிறார்கள். விவசாய அமைப்புகளின் தலைவர்களும் அதில் இருக்கிறார்கள்.ஆனால் அவர்கள் விவசாய நிலங்களில் இறங்குவதில்லை.

அரசியல்வாதிகள் தமது வாழ்நாளில் இவ்வாறான மோசமாக தோல்வியை சந்திப்பார்கள் என சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அதன் வெளிப்பாடு தற்போது வேதனையாகவும் கோபமாகவும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அவர்கள் தொலைக்காட்சியில் இந்தளவு புலம்புகிறார்கள் என்றால் வீட்டில் தனிமையில் இருக்கும் போது அவர்களது நிலைமை எவ்வாறு இருக்கும் என நான் நினைத்துபார்த்தது உண்டு. ஆனால் அரசாங்கம் என்பது என்னவென பிரஜைகளுக்கு இந்நாட்டில் நாம் முன்னுதாரணம் காட்டி வருகிறோம்.எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தை மக்கள் மீண்டும் தவற விட மாட்டார்கள்.

நாம் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி கொண்டு வருகிறோம்.இதற்கு முன்னர் எமது நாட்டின் அரசியலில் என்ன நடந்துள்ளது.ஊழல் மோசடி நிறைந்ததாகவே காணப்பட்டது. ஆனால் பல சப்தங்களுக்கு பின்னர் இந்த நாட்டில் ஊழல் மோசடி இல்லாத மக்கள் சார்பான அரசாங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நாம் மக்கள் பணத்தை கொள்ளையடிக்கவில்லை என எம்மால் நெஞ்சை நிமிர்த்தி தைரியமாக கூற முடியும். பிழையான பாதையில் சென்று கொண்டிருந்த நாட்டின் பொருளாதாரத்தை எம்மால் சரியான பாதையில் உறுதியாக முன்னோக்கி கொண்டு செல்ல முடிந்துள்ளது.

பொருளாதாரத்தில் பல விடயங்களில் எம்மால் உறுதித் தன்மையை பேண முடிந்துள்ளது. ஆனால் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் எமது நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு இருந்தது என்பதை சிந்தித்து பாருங்கள்.எனினும் நாம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து ஸ்திரமான பொருளாதாரத்தை நோக்கி பயணிப்பதற்கான வழியை ஏற்படுத்தி கொடுத்துள்ளோம்.

நாட்டை வங்குரோத்து அடைய செய்தவர்கள் மீண்டும் அரசாங்கத்தை ஸ்தாபிக்க போவதாகக் கூறுகிறார்கள்.அவர்களுக்கு கனவு காண முடியும். ஆனால் அவை ஒருபோதும் நடக்கப் போவதில்லை.

சிறந்த தொழில் வாண்மை மிகுந்த அரச ஊழியர்கள் நாட்டை விட்டுச் செல்லும் நிலைமை காணப்படுகிறது. நல்லதொரு தொழில் இயலுமை மிக்கவரை அரச சேவைக்குள் உள்வாங்க முடியாத நிலைமை காணப்படுகிறது. நாம் வினைத்திறனான அரச சேவை ஒன்றிணையே எதிர்பார்க்கிறோம்.

அரச சேவையின் சம்பளம் மிகக் குறைவான மட்டத்தில் இருந்தது. அதனால் நாம் இந்த நெருக்கடிக்கு மத்தியிலும் அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தில் நல்லதொரு அதிகரிப்பை செய்ய வேண்டும் என நினைத்தோம். அதனை செய்திருக்கிறோம்.

தொழில் வழங்கும் கொள்கையொன்றை தயாரித்திருக்கிறோம். தற்போது உயர் மட்டத்தில் பெரிய நெருக்கடி இல்லை. வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். ஆனால் மீண்டும் கூட்டமாக அரசாங்கத்திற்கு உள்வாங்கப் போவதில்லை.

அதேபோல் நாட்டின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காகவும் பொதுமக்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்கும் அவசியமான நிவாரணங்களை வழங்க வேண்டும்.அதன்படி நாம் வரும்போது ஒரு ஏக்கருக்கான உரத்திற்கு வழங்கப்பட்ட 15 ஆயிரம் ரூபாவை 25 ஆயிரமாக அதிகரித்தோம்.

அமைச்சரவையில் வயல்களில் வளர்க்கப்படும் மேலதிக பயிர்களுக்கும் 15 ஆயிரம் உர நிவாரணத்தை வழங்குவதாக தீர்மானித்தோம். இதற்கு முன்னதாக வயல் விளைச்சல்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டது. வயல்களில் வளர்க்கப்படும் மேலதிக பயிர்களுக்கும் நாம் உர நிவாரணத்தை வழங்குவோம்.

அஸ்வெசும வேலைத்திட்டத்திலிருந்து விடுவிக்கப்படவிருந்த எட்டு இலட்சம் குடும்பங்கள் மீண்டும் அஸ்வெசும திட்டத்திற்குள் தக்க வைக்க நடவடிக்கை எடுத்தோம். சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்கியுள்ளோம். நாங்கள் ஓய்வூதிய தொகையை 3000 ரூபாவினால் அதிகரித்தோம். மகாபொல 5000 ரூபாய் கொடுப்பனவை 7500 ரூபாவாக அதிகரித்திருக்கிறோம்.

புலமைப்பரிசில் கொடுப்பனவை 6500 ரூபாவாக அதிகரித்தோம். அதேபோல் நிலையங்களுக்குள் வசிக்கும் பிள்ளைகளுக்கு அதாவது பெற்றோர் இல்லாத வீதி பிள்ளைகளுக்கு 5000 கொடுப்பனவு வழங்கவும் 3000 ரூபாவை அவர்களின் நிலையான கணக்கில் வைப்புச் செய்யவும் நாம் தீர்மானித்திருக்கிறோம்.

மாதாந்தம் அவர்களின் நிலையான வைப்புக்காக 3000 ரூபாய் வழங்குகிறோம். அந்த அநாதை பிள்ளைகள் திருமணம் ஆகின்ற போது கொடுப்பனவை குறிப்பாக பெண் பிள்ளைகள் திருமணம் செய்கின்ற போது அவருக்கு வீடொன்றை கட்டிக்கொள்ள 10 இலட்சம் ரூபாய் பெற்றுக்கொடுப்போம .இல்லாவிட்டால் அவர்களை யார் பார்ப்பது.பாலர் பாடசாலை மாணவர்களுக்கு 60 ரூபாயாக இருந்த உணவுக் கொடுப்பனவை 100 ரூபாயாக அதிகரித்தோம்.

எனவே உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதியை முறையாக முகாமைத்துவம் செய்து அதனை பிரதேச சபைகளுக்கு வழங்க வேண்டும்.எனவே இதற்கு எமக்கு பிரதேச சபைகளினதும் நகர சபைகளினதும் அதிகாரம் எமக்கு தேவை.அதை வேறு தரப்பினருக்கு கொடுத்து பயன் உள்ளதா?

எனக்கும் அரசாங்கத்தின் எந்தவொரு அமைச்சருக்கோ தனிப்பட்ட இலட்சியங்கள் இல்லை. எமது அதிகார தரப்பு மக்களுடைய பணத்தில் ஒரு சதமேனும் திருட மாட்டார்கள் என்பதை நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். எனவே உயர் மட்டத்தில் மாத்திரம் ஊழல் லஞ்சத்தை நிறுத்தி மாத்திரம் போதாது. மக்களினது பணத்தை கொள்ளையடிக்காத பிரதேசபைகள் ஸ்தாபிக்கப் படவேண்டும். அப்போதே இந்த மாற்றத்தை தேசிய ரீதியாகவும் கிராம மட்டங்களிலும் கொண்டு செல்லலாம்.

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி மிகவும் முக்கியமானதொரு தேர்தலாகும். நாட்டை முன்னோக்கி நகர்த்தும் இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு பெற்று தர வேண்டும் எனவே அனைவரும் தயாராக இருங்கள் என்றார்.




THE TRAVELLER Global Private Limited
AIR LINE TICKETING AGENTS & TOUR OPERATORS
Since 1989

"On this joyous occasion of Eid, We wish happiness, peace, and prosperity to all.
May this special day bring moments of joy, togetherness, and cherished memories to everyone.
May your hearts be filled with gratitude, your homes with love, and your lives with success.
Let this day strengthen the bonds of friendship and camaraderie among us, and may our collective joy continue to grow.

Wishing you all a delightful Eid filled with laughter, blessings, and warmth.

Eid Mubarak!"

www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 MARCH 30 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அமைதியான உள்ளூராட்சி தேர்தலுக்கு ஆதரவளிப்போம்

நாட்டின் 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மே மாதம் ஆறாம் திகதி நடைபெற உள்ளது. 2023 ஆம் ஆண்டு நடைபெற இருந்த தேர்தல் 2025 இல் நடைபெறுகின்றது. புதிய அரசாங்கம் மக்களது உரிமைக்கு உத்தரவாதம் அளித்து இந்த குறுகிய காலத்தில் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்துள்ளமை ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றியாகவே கருதலாம். கடைசியாக 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெற்றது. அத் தேர்தலில் தெரிவானோர் 2023 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தனர். அதன் பின் மக்கள் பிரதிநிதிகளுக்கு பதிலாக அதிகாரிகளே உள்ளூராட்சி மன்றங்களை நிர்வாகித்தனர்.

அடுத்த மே மாதத்தின் பின் 336 உள்ளூராட்சி மன்றங்களும் மக்கள் பிரதிநிதிகளின் கைகளில் செல்ல உள்ளது. மே மாதம் ஆறாம் திகதி நடைபெற உள்ள தேர்தலில் சுமார் 90 ஆயிரத்திற்கு அதிகமானோர் போட்டியிடுகின்றனர். 336 உள்ளூராட்சி சபைகளில் 28 மாநகர சபைகளுக்கும் 38 நகர சபைகளுக்கும் 227 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தல் என்பது நாட்டின் ஜனநாயகம் எந்த மட்டத்தில் இருக்கிறது என்பதனை அளந்து பார்க்கும் ஒரு சந்தர்ப்பமாகும். ஒரு காலத்தில் தேர்தல்கள் யுத்தம் போன்று நடந்ததை மறக்க முடியாது. இப்போது அந்த நிலைமை மாறி இருக்கின்றது. ஜனநாயகம் எந்த மட்டத்தில் இருக்கின்றது என்பதனை அளவிட மீண்டும் ஒரு சந்தர்ப்பம் நாட்டு மக்களுக்கு கிடைத்துள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தல் , பாராளுமன்ற தேர்தல் என்பன ஜனநாயக ரீதியாக இடம்பெற்றது என்பதனை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்ற தேர்தலும் நடைபெறுவது அவசியமாகும். தேர்தலை சட்ட விதிகளுக்கு ஏற்ப நடத்துவதற்கு அதிகாரிகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவும் சட்டத்தை அமுல்படுத்தும் பொலீசாருக்கும் மக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்கி இத் தேர்தலை மக்களது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் தேர்தலாக அமைத்துக் கொள்ள வேண்டும். தேர்தலை அமைதியான தேர்தலாக நடத்துவதற்கு அரசியல் கட்சிகளுக்கு பாரிய பொறுப்பு உள்ளது. தமது ஆதரவாளர்களை வன் செயலில் ஈடுபடுவதை தவிர்த்து அமைதியான தேர்தலுக்கு வழிகாட்ட வேண்டும். மக்கள் விழிப்புணர்வுடனும் தூர நோக்குடனும் செயற்பட்டால் அமைதியான நீதியான தேர்தலை நடத்த முடியும். அனைத்து மக்களின் பிரார்த்தனையும் அதுவே..

## பிராந்திய நிருபர்களுக்கான திறந்த விண்ணப்பம்

பத்திரிகைத் துறையில் முன்னணி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.
எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜுலை 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**மின்னஞ்சல்:**
moonmedia178@gmail.com

**Whatsapp / Call:**
070 239 7210

## காஸாவில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை யுத்தத்தை நிறுத்துமாறு கோரி ஹமாஸ் அமைப்பையும் இஸ்ரேலையும் வேண்டி சில இடங்களில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று இருந்தாலும் தற்பொழுது அந்தப் பகுதி மக்கள் தாங்கள் முழுமையாக எதிர்ப்பு இயக்கத்துடன் இருப்பதாக தீர்மானத்தை உறுதியாக அறிவித்திருப்பதோடு தொடர்ந்தும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக போராடுவதாக அறிவித்திருக்கின்றனர். இந்நிலையில் துருக்கி அரசாங்கம் இந்தப் போரை நிறுத்துவதற்கான ராஜதந்திர முயற்சிகளில் தாம் தீவிரமாக ஈடுபடுவதாக குறிப்பிட்டிருந்தாலும் எந்தவிதமான முன்னேற்றத்தையும் இதுவரை கண்டதாக தெரியவில்லை. மறுபுறம் இஸ்ரேலிய இராணுவம் தென் லெபனானின் மீது பலமான தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இந்த தாக்குதல்களை நிறுத்துமாறு லெபனான் அரசாங்கம் கூறினாலும் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்தும் லெபனானிய நிலப்பரப்பின் மீது தாக்குதல்களை நடத்துவதை பிரான்சிய அரசாங்கம் கடுமையாக சாட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இஸ்ரேலினுடைய இந்த நடவடிக்கைகள் பிராந்தியத்தில் ஒரு பலமான பதற்றத்தையும் யுத்த சூழ்நிலையையும் உருவாக்கும் என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒருபுறம் அமெரிக்கா எமன் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றது. பதிலுக்கு எமன் அமெரிக்கா கடற்படைகளின் பல இலக்குகளை தாக்கி சேதங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட ஆளில்லா விமானங்களை எமன் இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது. முக்கியமான ஒரு விடயமாக எமனிய இராணுவ தலைவர்களின் தளபதிகள் இருக்கும் இடங்களை ருயுநு சார்பான போராளிகள் காட்டிக் கொடுப்பதாக எமனிய போராளிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவ்வாறு தொடர்ந்து நடக்குமாக இருந்தால் தாம் ருயுநு இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதாகவும் அதேபோன்று சவுதி அரசாங்கம் அமெரிக்காவிற்கு உதவி செய்தால் சவுதி இலக்குகளும் தாக்கப்படும் என்றும் எமனிகள் எச்சரித்து இருப்பது பிராந்திய ரீதியிலான பதற்றத்தை ஏற்படுத்தி இருப்பதோடு உலகளாவிய ரீதியில் மசகு எண்ணெயின் விலையை அதிகரிப்பதற்கும் காரணமாக அமையும். மறுபுறம் ஈரானிய இராணுவ தளபதி அமெரிக்காவில் எந்த சிறிய தாக்குதலுக்கும் மொத்த மத்திய கிழக்கிலும் உள்ள அமெரிக்காவின் இலக்குகள் தாக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். ஈரான் தன்னிடம் பல ஆயிரம் கிலோமீட்டர் சென்று தாக்கக்கூடிய வாஷ ிங்டன் நகரத்தையும் தாக்கக்கூடிய ஏவுகணைகள் இருப்பதாக மிரட்டி இருப்பதோடு எந்த தாக்குதலுக்கும் மிகக் கடுமையான பதிலடி நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்திருக்கின்றது. அவ்வாறு தாக்குதல் நடக்குமாக இருந்தால் அது மொத்த மத்திய கிழக்கிலும் பாரிய யுத்த சூழ்நிலையை உருவாக்குவதற்கான வாய்ப்பு இருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஈரானின் அணு ஆயுத தயாரிப்புகள் தொடர்பான உடன்பாடொன்று அடுத்த ஏழு நாட்களுக்குள் வராவிட்டால் ஈரான் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று டொனால்ட் ட்ரம் அறிவித்துள்ள சூழ்நிலையிலேயே ஈரானுடைய இராணுவ தளபதியினுடைய இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இன்னொரு புறம் உலகளாவிய ரீதியில் காஸா மக்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மீது தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. நைஜீரியாவின் தலைநகரில் காஸா மக்களுக்கு சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஐந்து பேர் உயிரிழந்திருப்பதோடு அமெரிக்காவில் துருக்கியைனு ஒரு மாணவர் கைது செய்யப்பட்டு இருக்கின்றார். இலங்கையிலும் ஸ்டிக்கர் ஒட்டியதற்காக ஒரு வாலிபர் கைது செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் போராட்டத்திற்கு உடனடி தீர்வு காணாவிட்டால் இந்தப் போராட்டம் ஒரு கணிசமான அளவில் உலகளாவிய ஒரு நெருக்கடியை தோற்றுவிக்கும் வல்லமை உள்ளதாக அரசியல் இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருந்தாலும் இஸ்ரேல் எந்த ஒரு விடயத்தையும் கருத்தில் கொள்ளாது முழுமையாக தொடர்ந்து தாக்குதல் நடத்துவது சர்வதேச மட்டத்தில் பலத்த கவலையை உருவாக்கி இருக்கின்றது. ஹமாஸை பொறுத்த மட்டில் ஹமாஸ் ஒரு சில ராக்கெட்டுகள் ஏவியதை மாத்திரமின்றி இதுவரை சரியான பதில் தாக்குதல்களை ஆரம்பிக்கவில்லை. இஸ்ரேலிய தரைப்படை நுழைந்தவுடன் அவர்களுடைய பதில் தாக்குதல் பலமாக ஆரம்பிக்கலாம் என பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.



## ருஷ்தியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு குறிப்பிட்ட குழு தவறான தகவல்களைப் பரப்பி வருகிறது.

இவ்வாறு சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வருகின்ற தகவல்களில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை என்பதுடன், அவ்வாறான தவறான தகவல்கள் சமூகத்தில் பரவுவதைத் தடுப்பது இலங்கை காவல்துறையின் பொறுப்பாகும்.

இந்த ஸ்டிக்கர் ஒட்டுவது தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில், இலங்கை காவல்துறை விசாரணையைத் தொடங்கியதுடன், இந்தச் செயலைச் செய்த இளைஞன் குறித்து விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அவர் ஸ்டிக்கர் ஒட்டுவதைத் தாண்டிய சில அடிப்படைவாத கருத்துக்களைக் கொண்டவர் என்பது தெரியவந்தது.

மேலும், விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிற முக்கிய தகவல்களின் அடிப்படையில், அவர் ஏதோ ஒரு வகையில் பயங்கரவாதச் செயலைச் செய்யக்கூடிய நபர் என்ற நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சந்தேக நபரின் நடவடிக்கைகள் குறித்து விரிவாக விசாரிக்கப்பட்டு வருவதுடன், அதன் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர் இணையம் மற்றும் பிற முறைகளைப் பயன்படுத்துவதால் சில உளவியல் உந்துதல்களுக்கு ஆளானவர் என்பது கவனிக்கப்பட்டதால், அந்த மனநிலையின் அடிப்படையில் மத தீவிரவாதச் செயலைச் செய்வதற்கான அவரது உணர்திறன் குறித்து மேலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த சந்தேக நபருக்குச் சொந்தமான கணினி வன்பொருள், தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் அவரது கையடக்கத் தொலைபேசி குறித்து தடயவியல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்து வருகின்ற ஒரு சில நாட்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் தேசிய மற்றும் மத ரீதியிலான நிகழ்வுகள் இடம்பெற உள்ள நிலையிலும், ஏராளமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலும் மேற்கண்ட கைதுகள் தொடர்பாக தவறான கருத்துக்கள் பரப்பப்படுவது நாட்டின் அமைதிக்கும் தேசிய பொருளாதாரத்திற்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், தவறான பிரச்சாரங்களுக்கு ஏமாறாமல் நாட்டின் அமைதியையும் பல்வேறு சமூகங்களுக்கிடையே நிலவும் நல்லிணக்கத்தையும் பாதுகாக்க நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதையும் நாம் இங்கு வலியுறுத்துகிறோம்.

இது தொடர்பான விசாரணைகள் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்பட்டு, விரைவாக முடிவுறுத்தப்பட்டு அது தொடர்பில் அவசரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### அல்லாஹ்வின அன்பை அடைய

அல்லாஹ்வுக்கும். (அவனுடைய) தூதருக்கும் அதனால் நீங்கள் (அல்லாவற்றான்) அமன்பை அடையலாம் கழ்படிந்து நடங்கள். (3:132)

### சுவர்க்கத்தின் விவசாயம்

உங்களில் இறைவனின் மன்லிப்புக்கும் சுவர்க்கத்துக்கும் விரைந்து செல்லுங்கள் அதன் விசாலம் வானாங்கள், பூமியின் விசாலத்தைப் போன்றது. உடையவர்களுக்காகவே தயார்படுத்தப்பட்டுள்ளது. (3.133)

### செல்வ நிலையிலும் வறுமை நிலையிலும்

அவர்கள் (எத்தகையவர்கள் என்றால்) செல்வ நிலைமையிலும் வறுமை நிலைமையிலும் தாமை செய்து கொண்டே இருப்பார்கள் கோபத்தை ஊழுங்கி ஊடுவார்கள் மனிதர்களின் குற்றங்களை மன்னித்து விடுவார்கள் அல்லாஹ் (இத்தகைய) அழகிய குணமுடையவர்களை நேசிக்கின்றான். (3:134)

### மானக்கேடான காரியம்

அன்றி,அவர்கள் யாதொரு மானக்கேடான காரியத்தைச் செய்து விட்டாசலும் அல்லது தங்களுக்குத தாங்களே தீங்கிழைத்துக் கொண்டாலும் உடனே அல்லாஹ்வை நினைத்து (அவனிடமே) தங்களுடைய பாவ மன்னிப்பைத் தேடுவார்கள் ( அல்லாஹ்வும் அவர்களை மன்னித்து விடுவான்) அல்லாஹ்வையன்றி ( இத்தகையவர்களின்) குற்றங்களை மன்னிப்பவன் யார்? அவர்கள் செய்த (துவறான) காரியத்தை (துவறென்று) அவர்கள் அறிந்து கொண்டால் அதில் நிலைத்திருக்கவும் மாட்டார்கள் (உடனே அதில் இருந்து விலகி விடுவார்கள். (3:135)

### நன்மை செய்தவர்களின் கூலி

இத்தகையவர்களுக்கு மரதிபவன். அவர்கள் இறைவனுடைய மன்னி ப்பும். நீறருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் எவனபதிகளும் ஆகும். அவர்கள் அங்கு என்றென்றும் தங்கிவிடுவார்கள். நன்மை செய்தவர்களின் கூலியும் நன்றே!
(18:136)

### தைரியத்தை இழந்து கவலைப்படல்

(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் தைரியத்தை இழந்து விட வேண்டாம். கவலைப்படவும் வேண்டாம். (உண்மையாகவே) நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் நீங்கள் தான் மேன்மை அடைவீர்கள் (3:134)

### கஷ்ட காலம் மாறி மாறி

ஏனென்றால் உங்களில் உண்மையாகவே நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் யாரென்று அல்லாஹ் அறிவித்து விடுவதற்காகவும் உங்களில் (மார்க்கத்திற்காக உயிரை அர்ப்பணம் செய்யும்) மாபெரும் தியாகியை அவன் எடுத்தறிவிப்பதற்காகவுமே (இவ்வாறு செய்கின்றான்) அநியாயக் காரர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை. (3:140)

### பரிசோதித்து அறிவதற்கு முன்

(நம்மிக்கையாளர்களே1) உங்களில் (அல்லாஹ்வுக்காக) போர் புரிபவர்கள் யார்? (கஷ்டங்களைப் பொறுமையுடன்) சகித்துக் கொள்பவர்கள் யார் என்பதை அல்லாஹ் (பரிசோதித்து) அறிவதற்கு முன்னதாகவே நீங்கள் சுவர்க்கம் நுழைந்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றீர்களா? (3142)

### இவ்வுலகில் மட்டும் நன்மை மறு உலகிலும் நன்மை

யாதொரு ஆத்மாவும் அல்லாஹ்வின் அனுமதியின்றி இறப்பதில்லை இது தவணை நிர்ணயிக்கப்பட்ட விதியாகும். எவர் (தன் செயலுக்கு) இந்த உலகத்தின் நன்மையை (மட்டும்) விரும்புகின்றோமோ அவருக்கு அதனை மட்டும் அளிப்போம். எவர் மறுமை நன்மையையும் விரும்புகின்றாரோ அவருக்கு அதனையும் வழங்குவோம். மேலும், நன்றி செலுத்துபவர்களுக்கு நாம் அதிசீக்கிரத்தில் நற்பயனை வழங்குவோம். (3:145)

## ஷவ்வால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை (திங்கள்கிழமை இரவு) ஹிஜ்ரி 1446 ஷவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டுள்ளது.

அவ்வகையில், 2025 மார்ச் மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமை ஹிஜ்ரி 1446 ஷவ்வால் மாதத்தின் 01ஆம் பிறை என கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பிறைக் குழு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன ஏகமனதாக அறிவித்துள்ளன.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும். அவ்வாறு தேவையுடையோர் 070 239 7210 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்



# ஊடக, பொதுப் பணிகளில் பங்காற்றிய பன்முக ஆளுமை

# தாஹா முஸம்மில்



தாஹா முஸம்மில், தனது 74 ஆவது வயதில் காலமானார். கொழும்பை சேர்ந்த இவர், கொழும்பு அல்ஹிதாயா கல்லூரியில் கல்வி பயின்ற பின் கணக்காளராக பொதுவாழ்வை ஆரம்பித்து, ஊடகத்துறைக்குப் பிரவேசித்தார். ஊடகத்துறைக்கு பிரவேசிக்க முன் லேக் ஹவுஸ் மற்றும் வீரகேசரி நிறுவனத்தில் பல படிகளில் பணிபுரிந்துள்ளார். முஸ்லிம்களது கட்டுப்பாட்டில் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் முன்னாடிகளில் ஒருவராக முஸம்மில் திகழ்ந்தார். 1996 ஆம் ஆண்டு நவமணிப் பத்திரிகை ஆரம்பிக்கும் பணியில் மூத்த ஊடகவியலாளர் மர்ஹூம் எம்.பி.எம். அஸ்ஹர், எம்.ரீ.எம். றிஸ்வி ஆகியோருடன் இணைந்து இவர் பணியாற்றினார். நவமணியின் செயற்பாட்டுப் பணிப்பாளராகவும், வெளிநாட்டு விவகாரச் செய்தியாளராகவும் பணியாற்றினார். நவமணி ஆரம்பிப்பதற்கு முன் எழுச்சிச்குரல் என்ற வாரப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. மர்ஹூம் எம்.பி. எம். அஸ்ஹரை ஆசிரியராகக் கொண்ட இப்பத்திகையை எம்.ரீ.எம். றிஸ்வியுடன் இணைந்து வெளியிட்டார். எழுச்சிக்குரல் மற்றும் நவமணிப் பத்திரிகைகளில் அச்சுப்பிரிவுக்கு இவரே பொறுப்பாக இருந்தார்.

1970களில் நாட்டில் சிறப்பாக இயங்கிய ஸ்ரீலங்கா முஸ்லிம் மாணவர் சங்கத்தின் மூலம் பொதுப்பணிக்கு பிரவேசித்தார். சட்டத்தரணி ரீ.கே. அசூர், கணக்காளர் றியாஸ் மிஹ்லார், அமீன் மசூத், எம்.ரீ.எம்.றிஸ்வி போன்றவர்களுடன் இணைந்து முஸ்லிம் மாணவர் சம்மேளனத்தை அக்காலகட்டத்தில் பலமான அமைப்பாக கட்டியெழுப்ப உதவினார். 1995 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தை உருவாக்கும் முன்னோடிகளில் ஒருவராக இவர் திகழ்ந்தார். அதன் உப தலைவர், பொதுச்செயலாளர் உட்பட பல முக்கிய பதவிகளை வகித்து அந்த அமைப்பினை பலமான அமைப்பாக உருவாக்குவதற்கு முஸம்மில் ஆற்றிய பங்களிப்பை நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நாடளாவிய ரீதியில் நடாத்திய ஊடகக் கருத்தரங்குகளில் முக்கிய வளவாளராக முஸம்மில் பணிபுரிந்தார். அவரது இறுதிக் காலகட்டத்தில் அவர் சுதந்திர ஊடக அமைப்பில் முக்கிய பதவிகளை வகித்து, ஊடக சுதந்திரத்துக்காகவும், மனித உரிமைக்காகவும் பங்களிப்புச் செய்தார். இவரது மறைவு குறித்து சுதந்திர ஊடக அமைப்பு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டு இருப்பதாவது, தாஹா முஸம்மில் ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றுக்காக உறுதியாக போராடிய, வெளிப்படைத்தன்மையும், உள்ளடக்கத் தன்மையும் சமூக அமைப்புகளிலும் நிலைத்தன்மைக்காண முக்கிய காரணிகளை அவர் நம்பினார். நீதிக்காகவும், நேர்மைக்காகவும் அவர் எடுத்த அடையாளம் பலருக்கு ஊக்கமளித்தது. சுதந்திர ஊடக அமைப்பு இவரது சேவைக்கு அளித்த அங்கீகாரமாகவே இதனைக் குறிப்பிடுகின்றேன்.

சுதந்திர ஊடக அமைப்பின் பொருளாளர், தொழிற்சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் பதவிகளை வகித்தார். இலங்கையின் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் பணிப்பாளர் சபை அங்கத்தவராக பல வருடங்களாகப் பணிபுரிந்தார். சப்மா என்ற தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் இலங்கை அலுவலக இணைப்பாளராகப் பணிபுரிந்தார். இதன் மூலம் தெற்காசிய நாடுகளின் ஊடகவியலாளர்களுடன் நெருங்கிச் செயற்லபடும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இதன் மூலம் தெற்காசிய நாடுகளின் தலைநகரங்களில் நடைபெற்ற சகல மாநாடுகளிலும் இலங்கை சார்பில் இவர் பங்குபற்றினார்.

சகோதரர் முஸம்மில், 1979 முதல் ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்டார். புரட்சியினை ஆதரித்து தொடராக எழுதி வந்தார். ஈரான் புரட்சியை ஆதரிப்பதனை தவறாகப் புரிந்து கொண்டு, இவரது செயற்பாட்டை விமர்சித்தனர். தலைநகரில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் ஜூம்ஆப் பிரசங்கம் ஒன்றில் இவரது பெயரை குறித்து விமர்சித்த போது தான் அதே பள்ளிவாசலில் ஜூம்ஆவில் கலந்து கொண்டதாக இவர் ஒரு முறை என்னிடம் தெரிவித்தார்.

சிறந்த ஆங்கில அறிவும் கணினி அறிவும் இவரிடம் இருந்ததனால் இவரது சேவை எல்லா அமைப்புகளுக்கும் தேவைப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் சுதந்திர ஊடக அமைப்பு போன்றவற்றில் இவரது பிரசன்னம் அத்தியாவசியமான ஒன்றாக இருந்தது. இவர் பகிரங்கத் தன்மை கொண்டவராகவும் செயற்பட்டார். நேர்மையாகச் செயற்படும் அமைதியான போக்குடைய ஒருவராக சகோதரர் முஸம்மிலைக் குறிப்பிடலாம்.

ஆறு பிள்ளைகளின் தந்தையான இவரது மனைவி மூன்று வருடங்களுக்கு முன் இறந்த பின் இவருடைய போக்கில் சற்று தளர்ச்சி காணப்பட்டது. என்றாலும், சிறிது காலத்தில் தனது மனதை தேற்றிக் கொண்டு குழந்தைகளுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இவர் செயற்பட்டார்.

உலகின் பல நாடுகளுக்கும் சென்று சர்வதேச மாநாடுகளில் இவர் கலந்து கொண்டு இருக்கிறார்.

ஈரான் இஸ்லாமிய குடியரசில் நடைப்பெற்ற பல மாநாடுகளில் இவர் கலந்து கொண்டுள்ளார். இவருடைய இறுதிக்கிரியைகள் நடைபெற்ற போது, நாட்டின் முக்கிய பல சிங்கள ஊடகவியலாளர்களும் தமிழ் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். இது இவரது சேவைக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே கருதப்படலாம். சுதந்திர ஊடக அமைப்பு மற்றும் தெற்காசிய அமைப்பின் முக்கியஸ்தர்கள் பிரசன்னமாகி, தமது இறுதி மரியாதையை சகோதரர் முஸம்மிலுக்குத் தெரிவித்திருந்தனர்.

முஸம்மில் உண்மையிலேயே ஒரு போராளி. தான் கொண்ட நிலைப்பாட்டில் அசையாது கொண்ட நம்பிக்கை வைத்திருந்தார்.

எல்லோருடனும் இணங்கிச் செயற்படுகின்ற ஒரு தன்மை அவரிடம் காணப்பட்டது. அந்த வகையில் நாங்கள் எங்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகவே அவர் இருந்தார்.

அவரது மறைவு எங்களைப் பொறுத்தவரையில் இந்த கட்டத்தில் ஒரு பேரிழப்பாகும். அவர் இந்தப் புனித ரமலானில் அவர் எங்களை விட்டு பிரிந்திருக்கின்றார். அவருடைய பாவங்களை மன்னித்து, அவருடைய மறுமை வாழ்வை சிறப்பாக அமைக்க எல்லோரும் பிரார்த்திப்போமாக! ஆமீன்

# பலவந்தமாக எரிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு ஆதரவு பிரார்த்தனைக்கான தினம்

மார்ச் 31, 2020 அன்று, இலங்கையின் நீர்கொழும்பில் COVID-19 பாதிப்புக்குள்ளான ஒரு முஸ்லிமின் ஜனாசா முதல் தடவையாக பலவந்தமாக எரிக்கப்பட்டது. இது முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு சோகமானதும் வேதனையானதுமான அத்தியாயத்தை தொடக்கி வைத்தது. அதைத் தொடர்ந்து வந்த மாதங்களில், 29 நாள் குழந்தை உட்பட பாதிக்கப்பட்டவர்கள் 278 பேர் குடும்பங்களின் விருப்பத்திற்கு மாறாக தகனம் செய்யப்பட்டனர். தகனம் செய்யப்படுவோம் என்ற பயத்தினால் பல முஸ்லிம்கள் ஊழுஏஐனு 19 ஆல் பாதிக்கப்பட்டபோது மருத்துவ உதவியை நாடுவதைத் தவிர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகினர்.

கட்டாய தகனம் தேசிய மற்றும் சர்வதேச சீற்றத்தைத் தூண்டியது, மனித உரிமை அமைப்புகளும் உலகளாவிய முஸ்லிம் சமூகங்களும் இந்தக் கொள்கையைக் கண்டித்தன. ஊழுஏஐனு-19 உறுதிப்படுத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்படும் உடல்களைக் கையாள்வதற்கான ஒரே வழியாக தகனம் செய்வதை திணிப்பது மனித உரிமை மீறலுக்கு இணையானது. இறந்த உடல்களை அடக்கம் செய்வதனால் ஊழுஏஐனு-19 போன்ற தொற்று நோய்கள் பரவும் அபாயம் அதிகரிக்கும் என்பதற்கு இலங்கையிலோ அல்லது வேறு நாடுகளிலோ நிறுவப்பட்ட மருத்துவ அல்லது அறிவியல் சான்றுகள் எதுவும் இல்லை.

இஸ்லாத்தில், தகனம் செய்வது கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி, இறந்தவர்களை கண்ணியத்துடனும் மரியாதையுடனும் அடக்கம் செய்வதையே மார்க்கம் வலியுறுத்துகிறது. இறந்த பிறகும் மனித உடல் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என்று இஸ்லாம் கற்பிக்கிறது. உடலை எரிப்பது அதன் புனிதத்தை மீறுவதாகக் கருதப்படுகிறது.

மறுமை நாளில் உடல் ரீதியான உயிர்த்தெழுதலில் இஸ்லாம் நம்பிக்கை கொண்டுள்ளது. இறைவனால் எந்த வடிவத்தையும் உயிர்ப்பிக்க முடியும் என்றாலும், தகனம் என்பது இறந்த உடலைக் கையாள்வதற்கான இயற்கைக்கு முரணான வழியாகக் கருதப்படுகிறது என்பதோடு மறுமை வாழ்க்கை பற்றிய இஸ்லாமிய நம்பிக்கை மரபுகளுக்கும் முரணானது. குற்றவாளிகள் அல்லது எதிரிகளின் விவகாரங்களில் கூட, இறந்தவர்களை எரிப்பதை நபி (ஸல்) அவர்கள் கடுமையாகத் தடுத்த சம்பவங்கள் நிறைய உள்ளன, நெருப்பை உடல்களை அப்புறப்படுத்துவதற்கான வழிமுறையாகப் பயன்படுத்தக்கூடாது என்பதை அவை உறுதிப்படுத்துகின்றன.

இவற்றை வைத்து , தகனம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது

தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க....



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

# 50, 000 வீரர்கள் புடை சூழ
# இஸ்ரேல் இரண்டாம் நிலை
# போருக்கு ஆயத்தம்...!



காஸா முனையில் மீண்டும் விரிவான தாக்குதல்களை நடத்தி வருவதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது. ஹமாஸ் அமைப்பால் நடத்தப்படும் சுகாதார அமைச்சகத்தின் தகவலின் படி 591 இரண்டாவது முறையாக படுகொலை செய்யப்பட்டார்கள். அது என்னவென்றால், காசாவில் பொதுமக்களை புழு, பூச்சிக்களை விட மோசமான நிலையில் தான் யூத சியோனிச வலதுசாரி இராணுவம் தன்னுடைய வரம்பற்ற செயல்பாடுகளை அமைத்து வருவதை நாம் காண கூடியதாக இருக்கிறது என்பதே யதார்த்தமான நிலையாகும்.. கடந்த வாரம் முதல் கட்ட சமாதான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் (IDF) மற்றும் இஸ்ரேல் பாதுகாப்பு நிறுவனம் (ISA - ஷின் பெட்) இணைந்து இது தொடர்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர். "கடந்த சில மணிநேரங்களில், 'இஸ்ரேலிய பொதுமக்கள் மற்றும் இஸ்ரேலிய பாதுகாப்பு படைகளுக்கு' எதிரான தாக்குதல்களைத் திட்டமிட்டு செயல்படுத்த பயன்படுத்தப்படும் 'பயங்கரவாதிகளின் புகலிடங்கள், ஏவுதளங்கள், ஆயுதக் கிடங்குகள் மற்றும் கூடுதல் இராணுவ உள்கட்டமைப்புகளை' அவர்கள் தாக்கியதாக" அந்த அறிக்கை கூறுகிறது."இப்போது, ஐடிஎப் மற்றும் ஐஎஸ்ஏ படைகள் காஸா பகுதி முழுவதும் உள்ள பயங்கரவாத இலக்குகள் மீது தாக்குதல் நடத்திவருகின்றன," என்றும் அறிக்கை கூறுகிறது.

காசாவில் பொதுமக்களை தொடர்ந்து படுகொலை செய்யப்பட வேண்டும் என்பதே யூத சியோனிச வலதுசாரி சித்தாந்த ராணுவ தலைமையும்



அமெரிக்காவும் தெளிவான திட்டத்தில் தான் தற்போது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு உடன்படாத நிலையில் போருக்கு தயாராகி வருவதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பெஞ்சமின் நிதான்யாகு வின் வரம்பற்ற போரை தாக்குதலை உலகம் கேட்க இயலாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு இருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் தான் மீண்டும் உலகம் கற்கால நிலையை நோக்கி நகர்ந்து வருகிறதாகவே எண்ணத் தோன்றுகிறது. சம கால வாழ்க்கையில் குழந்தைகள், பெண்களை வரம்பற்ற முறையில் படுகொலை செய்பவனுக்கு உலகம் மட்டுமல்லாமல் அரபுகள் கூட வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பதை நாகரீகமான எந்தவொரு மனிதனும் ஏற்றுக் கொள்ளவே முடியாது என்பதே நாம் ஒன்றும் சொல்லத்தக்க தேவையில்லை என்பதே உண்மை. ஏனெனில், ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் கத்தார் ஆகியோர்களின் சார்பில் எவ்வளவோ முயன்றும் இறுதி வரை முயற்சி செய்த நிலையில் கூட இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு இதனைத் வேண்டும் என்றே முழுமையாக தட்டி கழிக்க முயன்று வருவதில் தான் தெளிவான சதி தீட்டம் தீட்டி இருப்பதை சர்வதேச சமூகம் தெளிவாக புரிந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது. இதனைப் பதவி நீக்கம் செய்யப்பட்ட உளவு அமைப்பான சின் பெட் தலைவர் ஊடகங்கள் மூலம் உலகிற்கு தெரியப்படுத்திய சம்பவம் இன்று இஸ்ரேல் முழுமையாக பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதன் காரணமாகவே நாங்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள சென்ற நிலையில் கூட சமாதானம் ஏற்படாத வண்ணம் இடையில் வந்து விடுங்கள் என்று எங்களுக்கு சொல்லப்பட்டது என்று அவர் கூறுகிறார்.இதனை அறிந்த உடனேயே இஸ்ரேல் நாடு முழுவதும் பெஞ்சமின் நிதான்யாகு வின் இந்த போக்கிற்கு எதிராக மிகவும் கடுமையாக போராட்டங்கள் நடந்து வருவதை நாம் காண முடிகிறது.

தற்போதைய நிலையில் ரமலான் நோன்பு காலத்தில். 700 பேரை படுகொலை செய்த நிலையில் அடுத்த தாக்குதலில் ஈடுபட இஸ்ரேல் ராணுவம் தயாராகி வருகிறது .இந்நிலையில் இஸ்ரேல் ராணுவம் செவ்வாய்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் காஸிவின் வடக்கு எல்லைப்பகுதியில் இருக்கும் மக்கள் வேறு பாதுகாப்பான இடத்துக்கு செல்லுங்கள், இராணுவ நடவடிக்கை தொடரக்கூடும் என எச்சரித்துள்ளது.

அதாவது இஸ்ரேலிய இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் 50,000 இராணுவம் வீரர்கள் ஐந்து பிரிவுகளாக அனுப்பி வைக்கப்படும் என்றும் இவர்கள் தரை போரில் ஈடுபடுவார்கள் என்பதாக தெளிவாக தெரிகிறது.

இந்த தரைப் போர் மூலம் ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் ஏனைய வீரர்களை அழித்து விட வேண்டும் என்று கங்கனம் கட்டி கொண்டு இரண்டாம் நிலை போரில் ஈடுபட்டு வருவதற்கு செயல்திட்டம் ஆரம்பித்து விட்டது.

இதற்கிடையில் காஸாவில் உள்ள ஜபாலியா, பெட் லாஹியா, பெட் ஹானுன், ஷீஜா ஆகிய நகரங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மிகப்பெரிய அகதிகள் முகாம் இருக்கும் ஜபாலியாவில் இருந்து மக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று யூத சியோனிச வலதுசாரி ராணுவம் கேட்டுக்கொண்டுள்ளது.

பாலஸ்தானம் மற்றும் ஐநா. அதிகாரிகள் தரப்பில் கூறுகையில் 'காஸா நகரில் பாதுகாப்பான பகுதிகள் ஏதுமில்லை' எனத் தெரிவித்துள்ளனர். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில் ' காஸில் வைக்கப் பட்டிருக்கும் இன்னும் 59 இஸ்ரேலியர்களை ஹமாஸ் தீவிரவாதிகள் விடுவிக்க வேண்டும். 24 பேர் உயிருடன் இருக்கிறார்கள் என்று நம்புவோம்.

இந்த நிலையில் கசா மக்களின் அமைதி வாழ்க்கை மிகவும் கேள்விக்குறியாக மாறி வருவதைக் காணலாம். அதாவது இதுவரை நடைபெற்ற போரில் வாயிலாக 62,000 பேர் பலி ஆகிய நிலையில் இரண்டாம் கட்ட போரில் அதிகம் இழப்புகளை காஸா பொதுமக்கள் சந்திப்பார்கள் என்பது தான் மிகுந்த கவலைக்குரிய விடயமாகும்.

மிகவும் முககியமாக இந்த சதி தீட்டம் குறித்து அரபுகள் அனைவரும் மௌனம் ஆகி விட்ட நிலையில் காசாவில் வாழும் பொதுமக்களை காப்பற்ற இறைவனை தவிர வேறு யாரும் இல்லை என்பது தான் இன்றைய நிலையாகும்.

அரபுகள் குறிப்பாக ஜோர்டான், எகிப்து, யு ஏ இ , துருக்கி, கத்தார் மற்றும் சௌதி அரேபியா என்கிற யாரும் நியாயம் பேச முன்வராத நிலையில் இவர்களுக்கு பரிந்து பேச யாரும் இல்லை என்பது வெட்க கேடான விடயமாக உள்ளது.

குறிப்பாக 53 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு ஒதுக்கீடு செய்து காசாவின் மறு கட்டமைப்புக்கு வேலை செய்வதாக எகிப்து அறிவிப்பு செய்த நிலையில் தற்போது அனைவரும் வாய் திறந்து பேச இயலாத நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர் . அதாவது, அமெரிக்கா ஏகாதிபத்திய சக்திகளின் கை கூலிகளாக அரபுகள் மாறி போன நிலையில் தான் சக சகோதர தேசத்திற்கு கூட உதவிட இயலாத நிலைக்கு அரபுகள் தள்ளப்பட்டு விட்டதை வரலாறு ஒரு போதும் மன்னிக்க போவதில்லை.

நடைபெற்றுவரும் போரில், ஈரானின் நிழல் ராணுவமான ஹூதி கிளர்ச்சிப் படையினர் ஹமாஸுக்கு ஆதரவாக செங்கடல் வழியாகச் செல்லும் சரக்குக் கப்பல்கள் மீது ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் தாக்குதல் மேற்கொண்டனர்.

இஸ்ரேல் தொடர்பான கப்பல்களை மட்டுமே தாக்குதவதாக அவர்கள் கூறினாலும், இதனால் சர்வதேச கடல் வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

அதையடுத்து, யேமனில் ஹூதி இலக்குகள் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் தாக்குதல் நடத்தின.

இந்த நிலையில், காஸாவில் கடந்த ஜன. 19 முதல் போர் நிறுத்தம் அமலில் இருந்ததால் ஹூதி கிளர்ச்சியாளர்களும் செங்கடலில் தங்களின் தாக்குதலை நிறுத்தி வைத்திருந்தனர். ஆனால் அந்த ஒப்பந்தம் முறிந்ததைத் தொடர்ந்து தங்கள் தாக்குதலை ஹூதிக்கள் மீண்டும் தொடங்கினர்.

இதற்கிடையே, காசா மக்களுக்கு ஆதரவாக செயல்பாடுகளை அமைத்து மிகவும் கடுமையாக உழைத்து வரும் ஹொதீக்கள் தினமும் அமெரிக்காவின் குண்டு வீச்சு தாக்குதலின் மூலம் தினம் தினம் 15 பேர் வரை பலியாகி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் பரபரப்பான சூழ்நிலை காணப்படுகிறது.

அமெரிக்கா ஒரு வேளை ஈரான் நாட்டின் மீது தாக்குதலை தொடங்கினால் அது எல்லையற்ற மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அது சர்வதேச அளவிலான மூன்றாம் உலகப்போர் ஆக மாறி விடும் என்பதே யதார்த்தமான நிலையாகும்.

இத்தனை களேபரங்கள் நடந்து வரும் நிலையில் இதன் முடிவுகள் எப்படி அமையப் போகிறது என்பதை நாம் தெளிவாக கூறி விட சாத்தியக்கூறு இல்லை. ஏனெனில் வரலாற்றில் அமெரிக்கா எந்தவொரு தேசத்திலும் நுழைந்து போரில் வெற்றி பெற்றதாக சரித்திரம் இல்லை என்ற நிலையில் இங்கு தனது பங்காளியாக இஸ்ரேல் நாட்டையும் தன் சார்பாக போரில் ஈடுபட முடிவு செய்துள்ளது என்பதே இந்த போரின் தற்போதைய நிலையாக இருக்கிறது என்பதை மட்டுமே இந்த தருணத்தில் நாம் சொல்லிக் கொள்ள முடியும்....!

# உள்ளூராட்சி சபைத் தேர்தலும் பட்டலந்தை ஆணைக்குழு அறிக்கையும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 107 அரசியல் கட்சிகள் மற்றும் 49 சுயேட்சை குழுக்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. இந்த தேர்தல் 2025 மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது. பிரதான அரசியல் கடசிகள் வரிசையில் தேசிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ.ல.சு. கட்சி, சர்வஜன சந்த பலய, ஐ.தே. கட்சி, கிழக்கில் சில முஸ்லிம் கட்சிகள், வடக்கில் தமிழ் கட்சிகள் பல ஆகியவற்றுடன் சுயேட்சைக் குழுக்கள் பலவும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. மாநகர சபைகள் 28, நகர சபைகள் 36 மற்றும் பிரதேச சபைகள் 272 ஆகியவவை உள்ளடங்கலாக 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற இருக்கின்றன. அவற்றுக்கான வேட்புமனு தாக்கல் நடைபெற்றிருக்கின்றன. தேர்தல் நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றது. என்றாலும் 2025 மே மாதம் முதலாம் வாரத்தில் இந்த தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டு இதே தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்த பின்னர் அப்போதைய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவால் தேர்தல் பின்போடப்பட்டது. நாட்டின் மோசமான பொருளாதார நிலையை காரணம் காட்டி தேர்தல் நடத்த 1000 கோடி ரூபா பணம் இல்லை என்ற காரணத்தை காட்டி தேர்தலை பின்போட்டார். பின்னர் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விஷேட திருத்தம் சட்டமூலம் ஒன்றின் மூலம் முன்னைய வேட்புமனுக்களை இரத்து செய்து புதிதாக வேட்புமனு தாக்கல் செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும் ஏற்கனவே இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டு நாட்டில் பாரிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட்ட பின்னர் இந்த தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற இருக்கின்றன.

நடந்து முடிந்த தேர்தலின் பின்னர் நாட்டில் நடைமுறையில் இருந்த பல அரசியல் கட்சிகள் மிக மோசமான பின்னடைவை கண்டிருக்கின்றன. பிரதான எதிர்க் கட்சியான சமகி ஜனபலவேகய என்ற பெயரிலான ஐக்கிய மக்கள் சக்தியின் வாக்குப் பலம் 56 இலட்சத்தில் இருந்து 43 இலட்சமாக வீழ்ச்சி கண்டது. அதன் பின்னர் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மேலும் பின்னடைவு கண்டு 19 இலட்சத்து 68 ஆயிரமாக வீழ்ச்சி கண்டது. அவ்வாறே 2024 செப்டம்பர் பொதுத் தெர்தலில் ஐ.தே.கட்சி தலைமையிலான கூட்டணி 500,835 வாக்கு களையும் 2019 மற்றும் 2020 தேர்தல்களில் 69 இலட்சம் வாக்குப் பலத்தை பெற்றிருந்த பொது ஜனபெரமுன கட்சி நாமல் ராஜபக்ஷ தலைமையில் 350,429 என்ற நிலைக்கு பின் தள்ளப்பட்டது. வடக்கில் தமிழரசுக் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 257,813 வாக்குகளையும் கிழக்கை பிரதானமாகக் கொண்டு தனித்து போட்டியிட்ட ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கட்சி 87,038 வாக்குகள் என்ற அடிப்படையிலும் பாரிய பின்னடைவுகளை சந்திக்க நேரிட்டன. எதிர்பாராத விதமாக 2024 ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் பின்னர் பொதுத் தேர்தலிலும் ஜே.வி.பி. யின் மறு வடிவமான தேசிய மக்கள் சக்தி எழுச்சி கண்டதால் ஏற்பட்ட அரசியல் மாற்றமே மரபு ரீதியாக செல்வாக்குப் பெற்றிருந்த கட்சிகள் வீழ்ச்சி காண அடிப்படை காரணமாக அமைந்தது எனலாம்.



2024 செப்டம்பர் மாதம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மொத்தமாக 6,863,186 வாக்குகளை பெற்றுக் கொண்டது. அக்கட்சி 2024 ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகள் 5,634,915 ஆகும். ஆனால் பொதுத் தேர்தலில் மேலும் 12 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற்றுக் கொள்ள முடிந்தது.

எவ்வாறாயினும் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கடந்த 07 மாத காலத்தில் நாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள், மக்களது வாழ்க்கைச் செலவு உயர்வை குறைக்க ஏற்படுத்திய தாக்கம் போன்ற காரணங்களை அடிப்படையாக வைத்து பார்த்தால் தொடர்ந்தும் பொதுத் தேர்தலில் இருந்த மக்கள் ஆதரவு இருக்கின்றதா அல்லது வீழ்ச்சி கண்டிருக்கின்றதா என்பதை கண்டு கொள்ள நல்ல வாய்ப்பாக இந்த தேர்தல் அமைய இருக்கின்றது.

அவ்வாறு தேசிய மக்கள் சக்தி ஏதாவதொரு வகையில் வீழ்ச்சியை நோக்கி செல்வதாக இருந்தால் அந்த வீழ்ச்சி அல்லது மக்கள் ஆதரவிலான பின்னடைவு கடந்த பொதுத் தேர்தலில் படு தோல்வியை தழுவி வாக்குப்பலம், மக்கள் ஆதரவை இழந்த கட்சிகளின் மீள் எழுச்சிக்கு வழிவகுப்பதாக அமையலாம்.

அதிலும் பிரதான எதிர்க் கட்சியாக இருந்து வரும் சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி (சஜப) மற்றும் நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி மற்றும் ஐ.தே.கட்சி, ஸ்ரீ.ல.சு.கட்சி என்பவற்றின் மீள் எழுச்சி எவ்வாறு அமையும் என்பது முக்கியமானதாகும். ஆனாலும் தற்போதைய நிலையில் இந்த அரசாங்கத்தால் புதிதாக எந்த விதமான மாற்றத்தையும் இதுவரையில் ஏற்படுத்த முடியாமல் போனாலும் மக்களின் மனதை கவர்ந்து இழுத்தெடுக்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் உரைகள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. அரசாங்கம் என்ற வகையில் இதுவரையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்திலான மாற்றம் என்பவற்றை இலக்காகக் கொண்ட திட்டங்களை முன்வைக்கவில்லை. ஆனாலும் தொடர்ந்தும் கடந்த ஆட்சியாளர் களது முறைகேடு களையும் ஊழல்களையும் தேடி எடுத்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்து மக்கள் ஆதரவை தேடுவதோடு ஏனைய அரசியல் கட்சிகள் குறித்த மக்களது வெறுப்பை தூண்டும் வேலைகள் நடைபெறுகின்றன.

அடுத்த விடயமாக தற்போது பேசு பொருளாக மாறி இருக்கின்ற முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கவின் 1989 மற்றும் 19190 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்படட்தாக கூறப்படுகின்ற பட்டலந்தை சித்திரவதை முகாம் பற்றிய விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை வெளியே போடப்பட்டிருக்கின்றது. அக்காலப்பகுதியில் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் கடத்தப்பட்டும், சிறை பிடிக்கப் பட்டும், சித்திரவதை செய்து கொல்லப் பட்டமை தொடர்பான விசாரணை ஆணைக்குழு அறிக்கையாக இந்த பட்டலந்தை ஆணைக்குழு அறிக்கை இருக்கின்றது. இந்த ஆணைக்குழுவை 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி யாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க காலப்பகுதியில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகளின் பின்னர் தயாரிக்கப்பட்ட அறிக்கையாகும்.

இந்த அறிக்கை 2001 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்டிருந்ததாகும். இப்போது புதிதாக தூசு தட்டடப்பட்டு வெளியே எடுக்கப்பட்டு கடந்த 2025.03.17 ஆம் திகதி அமைச்சரும் சபை முதல்வருமான சுனில் ஹந்துன் ஹெட்டி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த அறிக்கை தொடர்பான இரண்டு நாள் விவாதம் பாராளுமன்றத்தில் நடத்தப்பட இருக்கின்றது. 2025.04.10 ஆம் திகதியும் அதன் பின்னர் மே மாதத்தில் ஒருநாளில் என்று இரண்டு நாட்களாக விவாதம் நடத்தப்பட்டு பட்டலந்தை வதை முகாமுக்கு பொறுப்பானவர் என்ற அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா மீது நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டு வருகின்றது. ஒன்றில் அவரது பிரஜாவுரிமையை நீக்குவது அல்லது சட்டமா அதிபருக்கு அறிக்கையை சமர்ப்பித்து சட்ட நடவடிக்கை எடுக்க கோருவது என்ற அடிப்படையில் முன்னெடுப்புக்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

எவ்வாறாயினும் ரனில் விக்கிரமசிங்கா இந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக தெரிவிக்கையில் தனக்கும் பட்டலந்தை வதைமுகாம்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் அன்றைய 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையில் சட்ட ஒழுங்கை பாதுகாக்க அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார். அப்போதைய சந்தர்ப்பத்தில் குறித்த பிரதேசத்தில் பொலீசாருக்கு பாதுகாப்புக்காக தங்குவதற்காக வீடமைப்பு தொகுதியொன்றை வழங்கியது மாத்திரமே தனது வேலையாக இருந்தது என்றும் தொவித்துள்ளார்.

அத்துடன் தற்போது இந்த வதை முகாம் பற்றியும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பற்றியும் பேசும் ஜே.வி.பி. யினர் அன்றைய சூழ்நிலையில் பல சந்தர்ப்பங்களில் இதே ரனில் விக்கிரமசிங்காவுடன் கைகோர்த்து செயல்பட்டனர். 2003 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டார நாயக்காவுடன் இருந்து அந்த ஆட்சிக்கு ஆதரவு வழங்கிய போது பட்டலந்தை பற்றி பேசவில்லை. அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியின் பங்காளிகளாக இருந்த போதும் பட்டலந்தை பற்றி பேசவில்லை. அதே போன்று ரனில் பிரதமராக இருந்த 2015 முதல் 2019 இடைப்பட்ட நல்லாட்சி காலத்திலும் இதே ஜே.வி.பி. ஆட்சிக்கு முட்டுக் கொடுத்ததாயினும் பட்டலந்தை பற்றி பேசாமல் ரனிலுடன் தோள் கொடுத்து அரசியல் நடத்திவிட்டு இப்போது ஏன் பட்டலந்தை பற்றி பேச வேண்டும் என்ற கேள்விகள் ஐ.தே. கட்சி தரப்பில் இருந்து கேட்கப்படுகின்றது.

அதே நேரம் 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்பாவி இளைஞர்களை வீதிக்கு இறக்கி அரசுக்கு எதிரான வன்முறைகளுக்கு தள்ளியது இந்த ஜே.வி.பி. ஆகும். அன்றைய சூழ்நிலையில் இலங்கை இந்திய உடன்படிக் கைக்கு எதிராக செயற்பட்டதோடு அரசியல் அமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்தது. பல்கலைக்கழகங்களில் முதலில் தாய்நாடு என்றும் அடுத்து பட்டம் என்றும் கடுமையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டில் அசாதாரண சூழ்நிலையை தோற்றுவித்ததோடு அரசாங்கத்திற்கு ஆதரவான அரச அதிகாரிகள், பொலீசார், இராணுவத்தினர், என்று தாராதரம் பாராது பலரை ஜே.வி.பி. படுகொலை செய்தது. அரச சொத்துக்களை அழித்து நாசமாக்கியது. சுமார் 4000 பொது போக்குவரத்து பஸ் வண்டிகள் எரித்து நாசமாக்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல் 1960 ஐ.தே.க. ஆதரவாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்று ஐ.தே.க. குற்றம் சாட்டுகின்றது.

இத்தகைய வன்முறையை கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த நடவடிக்கையாக அப்பாவி இளைஞர்கள் இவ்வாறு வதைமுகாம் என்றும் சிறைப் படுத்தல் என்றும் கொலை செய்யப்படும் நிலை ஏற்பட்டது. ஆனாலும் அதன் பின்னர் எந்த அரசாங்கமும் 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற ஜே.வி.பி. யின் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவது என்ற அடிப்படையில் ஆணைக்குழுக்களை நியமித்து விசாரணைகள் நடத்தப்படவில்லை. ஆனாலும் 1970 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு காலப்பகுதி வரையில் அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சியில் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனா காலப்பகுதியில் விஷேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து விசாரணை செய்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையை 07 வருடங்களுக்கு பறிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனாலும் 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பாராளுமன்றத்தில் விஷேட சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் குடியியல் உரிமையை பறித்த செயலை சட்டரீதியற்றது என்று திருத்தம் செய்யப்பட்ட தோடு அவரை குற்றமற்றவர் என்றும் அறிவித்தது. இப்போது பட்டலந்தை ஆணைக்குழு அறிக்கையை விவாதத்திற்கு எடுத்து ரனில் மீது குற்றசாட்டை முன்வைத்து ஜே.வி.பி. குற்றமற்ற கட்சி என்றும் அதன் அப்பாவி இளைஞர்கள் அநியாயமாக ஐ.தே.க. ஆட்சியில் படுகொலை செய்யப்பட்டனர் என்று வரலாற்றை மாற்றி எழுதுவதே பின்னணி நோக்கமாகும். ஏனெனில் இன்று தேசிய மக்கள் சக்தி ஜே.வி.பி.யின் மறு வடிவமாக இருந்தாலும் அதன் முன்னைநாள் அங்கத்தவர் களுக்கு குற்றம் இழைத்த அவப்பெயர் இருந்து வருகின்றது. இரத்தக்கறை படிந்த வரலாறு இருக்கின்றது. அந்த வரலாற்றை மாற்றி எழுத இனிமேல் வேறு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. அதற்காகதான் பட்டலந்தை விசாரணை ஆணைக்குழு அறிக்கை தூசு தட்டப்படுகின்றது எனலாம். சந்தர்ப்பமாக பயன்படுத்தப் படுகின்றது.

மறுபுறமாக தேர்தல் இலக்கும் இந்த ஆணைக்குழு தொடர்பான விவாதத்தில் இருக்கின்றது. தற்போதைய நிலையில் இந்த ஆணைக்குழு அறிக்கையை காட்டி தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்கவும் முடியுமாகின்றது. அதுபற்றி பேசும் போது அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டை திசை திருப்பவும் சந்தர்ப்பமாக பயன்படுத்த முடிகின்றது. அத்துடன் மேடைப் பிரசார ஆயுதமாகவும் பயன்படுத்த முடிகின்றது.

SAFEWAY
TRAVELS & TOURS
Organizing Hajj, Umrah Pilgrimage & Airline Ticketing



Leaving 28th May
Returning 22nd June
Staying at Clock Towers Hotel
Staying 5 days in Madina
191/20-1, Siebel Garden,
High Level Road, Kirulapana,
Colombo – 05, Sri Lanka.
E-mail: Safewayfarook1@gmail.com
Web: www.sfewaytravelssandtours.com
hotline : +94 11 2513227
: +94 11 2513226
: +94 11 2513373
Insta: Umarahwithsafeway
FB: Safeway Travels & Tours
Res: 191/20, Highlevel Road, Kirulappana, Colombo 06.



Approved By Sri Lankan Government
IATA
HAJJ 2025
BOOKING STARTED - CETAGORY B
GUIDE BY



As Sheikh
M.S. Abdul Wadood Jiffry
0772848419 / 0720992315
Madulbowa, Hemmathagama

நபிவழியில் நமது ஹஜ்
அல்குர்ஆன் அஸ்ஸுன்னா அடிப்படையில் ஹஜ்ஜை வழிநடத்துவதற்கான
ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஹஜ் செல்வதற்கான பதிவுகள் முஸ்லிம்
சமய காலாசார திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளுமாரு வேண்டிகின்றோம்
எமது நிறுவனம் மூலம் சேல்ல விரும்புவோர் எம்முடன் உடனடியாக தொடத்துகொல்லவும்.
தாமதமின்றி பதிவுக்கு முந்திக்கொள்ளுங்கள்.
FOR MORE DETAILS
DESAMANIYA.
M.R. MOHAMED FAHIM Justice of Peace (Whole Island) 0777308025
M.F HAMDHAN AHAMED 0777236978
HAMDHAN'S PRIVATE LIMITED
AIRLINE TICKETING, TOURS, TRAVELS HAJJ & UMRAH OPERATORS
0812353449 / 0725308025
NO.95, AMBGAMUWA ROAD GAMPOLA, SRI LANKA 20500




வாசிப்பீராக! 26



பிஸ்தாமி அஹமத்

# வாசிப்பின் புதிய செல் நெறிகள்

நவீன தொழில்நுட்பம் எப்படி எமது வாசிப்பை மாற்றி அமைக்கிறது?

அண்மைக் காலங்களில் நவீன தொழில்நுட்ப பொறிமுறை எமது பண்டைய பாரம்பரிய வாசிப்பு முறைமைகளை தலைகீழாக மாற்றி உள்ளது. சாதகமாகவும் பாதகமாகவும் அது எம்மில் செல்வாக்குச் செலுத்தி வருகிறது.

பல்வேறு தளங்களில் அது வாசிப்பை இலகுப்படுத்தி வாசகர்களுக்கு வசதியாக மாற்றி விடுவதோடு உடனுக்குடன் புத்தகங்களை கைக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் ஏற்படுத்தி தந்திருக்கின்றது. வாசகர்களுக்கு தொழில்நுட்பம் செய்து தந்திருக்கின்ற மகத்தான பங்களிப்பாக இதனை கருத முடியும்.

அந்த வகையில் நவீன கால வாசகர்கள் வாசிப்பை தொடரும் ஒரு சில உத்திகளை உபாயங்களை இங்கு சுருக்கமாக அடையாளப்படுத்த விரும்புகிறோம்.

### 1. Audiobooks and Podcasts

**ஒலிவடிவ நூல்கள் .**

காலம் மிக வேகமாக கரைந்தோடி விடுவதால் கிடைக்கின்ற நேரத்தில் உச்ச பட்ச பயன்பெற்றுக்கொள்வதற்காக புத்தகங்களை கையில் எடுத்து வாசிப்பதற்கு பகரமாக ஒலி வடிவ நூல்களை செவிமடுக்க கூடிய வசதிகள் இன்று காணப்படுகின்றன. இதன் வழியாக எமது வாசிப்புக்கான நேரத்தை நாம் ஒழுங்கமைத்துக் கொள்ளலாம்.

நீண்ட தூர பயணங்களின் பொழுது, வாகனம் செலுத்திக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பமாக இருக்கட்டும், உடற்பயிற்சிகளை செய்து கொண்டிருக்கின்ற சந்தர்ப்பங்களாக இருக்கட்டும் ஒலி வடிவ நூல்களை செவிமடுக்கக்கூடிய வசதி இன்று பரவலாக காணப்படுகின்றன.

முழுமையாக கவனத்தைக் குவித்து வாசிப்பை மாத்திரம் செவிமடுக்க முடிந்தாலும் மற்றொரு வேலையை செய்து கொண்டு புத்தக வாசிப்புச் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற போது வாசிப்பின் வழியாக இயல்பாக வரக்கூடிய அந்தச் சுவை குன்றி இருப்பது இங்கு கவனிக்கத்தக்க விடயம்

### 2. The Influence of Social Media

**சமூக ஊடகங்களின் அதீத செல்வாக்கு**

சமூக ஊடக தளங்களில் குறிப்பாக Tiktok செயலி போலவே வாசிப்பு மீதான கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றது டீழழம வுழம செயலி. அது தற்பொழுது சர்வதேச பாசகர்களுக்கு மத்தியிலே டீழழமவுழம ஆக பரிணமித்துள்ளது. தமக்குத் தேவையான புத்தகங்களை அறிமுகம் செய்வது எதிர் வினையாற்றுவது பரிந்துரைகளை முன் வைப்பது தத்தமது கருத்துக்களை முன்வைப்பது போன்ற வசதிகள் இதனூடாக செய்து தரப்படுகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட வாசகர்கள் இணைந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால் ஒரு நூலை பரந்தளவில் வாசித்து கருத்துகளை வித்தியாசமான நோக்கில் முன்வைக்கக்கூடிய வாய்ப்புகள் உடனடியாக வாசகர்களுக்கு கிடைப்பதும் இதன் மூலம் பெறுகின்ற மிக முக்கியமான நன்மையாக கருதப்படுகிறது.

குறிப்பிட்ட புத்தகம் புத்தகத்தின் உள்ளடக்கம் அதனுடைய மொழிபெயர்ப்பு நூலாசிரியர்கள் ஏனைய விமர்சனங்கள் குறித்த பரப்புகள் இங்கு பேசப்படுவதால் புத்தகம் கணிசமான அளவில் பரவலடைவதனை எசையட காணலாம்.

### 3. Interactive Books

E-books மற்றும் அவை தொடர்பான யீள செயலிகள் வழியாகவும் வாசிப்பு, வாசிப்புலகம், நூல்கள் போன்றன சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றதாக மாறி வருகிறது

இதன் வழியாக புத்தகத்தை மையப்படுத்திய ஒலி வடிவ, காட்சி வடிவ, காணொளி வடிவ, அசையும் படங்கள் வழியாக, புனைவுகள் வழியாக கருத்துக்கள் வெளி வருகின்றன

இது புத்தகத்தை மையப்படுத்திய புத்தாக்க சிந்தனைகளுக்கு வழி வகுக்கின்றன.

### 4. Serialized Stories Platforms

Kindle Vella போன்ற செயலிகள் வாசகர்களுக்கான வாயில்களை திறந்து வைத்திருக்கின்றன.

குறுங்கதைகள் வழியாக தத்தமது கருத்துக்களை வெளியிடுவதற்கு இந்த செயலிகள் வசதிகளை செய்து தருகின்றன.

Storytelling மூலமாக கதையை இன்னொரு திசை நோக்கி இழுத்துச் செல்லவும் இடைவினை ஆற்றவும் வேறுபட்ட அபிப்பிராயங்கள் வழியாக கதையைக் கொண்டு செல்லவும் வழி அமைக்கிறது.

இது வாசகர்களின் புத்தாக்கத்திற்கு வழியமைக்கிறது

### 5. More Diverse Books

பரந்து பட்ட பன்மைத்துவ வடிவிலான புத்தக வாசிப்பு பொறி முறைகள்

பன்மைத்துவ சமூக கட்டமைப்பில் வாழ்கின்றவர்கள் அடுத்த சமூகத்தவர்களது, இனங்களது பண்பாட்டை கலாச்சாரத்தை வரலாற்றை விழுமியங்களை சமய ஒழுகலாறுகளை அறிந்து கொள்வதற்கும் அவை தொடர்பான வினாக்களை முன்வைத்து தெளிவுகளை பெற்றுக் கொள்வதற்கும் இது வழியமைக்கின்றது

முடிவுரை

வாசிப்பது முன் அட்டையை மாத்திரம் வைத்து காய் நகர்த்துகின்ற ஒரு விடயம் அல்ல. பக்கங்களை பிரட்டி விடுவதால் மட்டும் சிறந்த வாசகர்களாக மாறிவிட முடியாது.

வாசிப்பு எம்மை வாழ வைக்க வேண்டும். இடைவினை ஆற்ற வைக்க வேண்டும். வாசிக்கின்ற குறித்த புத்தகத்தின் உள்ளடக்கம் கருத்துக்கள் போன்றவற்றை உயிர்த்துடிப்புடன் பேச, கலந்துரையாட, விவாதிக்க களமமைத்து தர வேண்டும். வாசிக்கையில் எமக்குள் எழுகின்ற எண்ண அலைகள் உணர்வுகளை வாழ்வியல் தளத்தில் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும். இவை அனைத்துக்கும் பாரம்பரிய வாசிப்பை விடவும் நவீன தொழில்நுட்ப பொறிமுறைகளின் வசதிகளுடன் கூடிய வாசிப்பு திறந்த களத்தை ஏற்படுத்தி தருகின்றது. குறிப்பிட புத்தகத்தை வாசித்த பலரோடு எம்மை இணைத்து விடுகின்றது.

நூலாசிரியர்களோடு எம்மை இணைத்து விடுகின்றது. புத்தகத்துக்கான விமர்சனங்களோடு பரிந்துரைகளோடு திருத்தங்களோடு எம்மை இணைத்து விடுகின்றது.

கடந்த கால பாரம்பரிய வாசிப்பு பொறிமுறையை விடவும் நவீன தொழில்நுட்பம் ஏற்படுத்தி தந்திருக்கின்ற வாசிப்பு பொறிமுறை பல படிகள் பல பாய்ச்சல்கள் முன்னோக்கி நகர்ந்திருப்பது வாசகர்களை தொடர்ச்சியாக வாசிப்பதற்கு தூ ண்டக்கூடிய வகையில் தன்னுடைய பொறிமுறைகளையும் கட்டமைத்து தருகிறது. வாசக உலகை விட்டும் தலைமறைவாகி விடாமல் தொடர்ச்சியாக வாசிக்கக்கூடிய உந்துதலை தந்து தொடரான வாசிப்பை நோக்கி எம்மை நகர்த்துகிறது.






நாச்சியாதீவு பர்வீன்

மக்களோடு வாழுகின்ற இலக்கியப் படைப்புகள் மகத்தானதாக தனித்துவமான சிறப்பியல்புகளோடு மிளிர்கின்றன. இவைகளே காலத்தால் அழியாத வரலாற்றினை உள்ளடக்கமாகக் கொண்டு ஆற்றல்மிகு புலமையின் வெளிப்பாட்டினை

# காற்றுக்கு தூதுவிடும் கவிஞர் கனகசூரியம் யோகானந்தன்

– கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸ் –

தமிழ் கவிதைப் பரப்பில் கவிஞர் க.யோகானந்தன் அவர்களின் பெயர் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. அவருக்குள்ளிருக்கும் ஆற்றல், ஆளுமை, கவிப்புலமை, கருத்துச்செறிவு, சிந்தனைப் பரம்பல் போன்றன இவற்றிற்குப் பிரதான காரணிகளாக அமைவதை அவதானிக்கலாம்.

ஒரு விடிவெள்ளியாக பிரித்து அடையாளப்படுத்தக்கூடிய இவரது கவிகளில் கம்பீரமும், கவர்ச்சியும், கவிவீச்சும் நிறைந்து வாசகரை தன்பால் ஈர்க்கின்ற ஆகர்சிப்புத்தன்மை நிறைந்திருப்பதைக் காணலாம். தனது எண்ணக்கருக்களை அழகுற கவிகளாக வடிப்பதில் முன்னிலை வகிக்கின்ற கவிஞர் யோகானந்தன் அவர்கள், எழுத்துலகில் பிரபல்யம் பெறுவதற்கு அவரது கவிநயமும், கருத்துணர்வுகளும் பெரிதும் துணைபுரிகின்றன.

"காற்றுக்குத் தூதுவிட்டு" எனும் கவிதைத் தொகுதி இவரது ஐந்தாவது கவி நூலாக அமைகிறது. ஏற்கனவே "உண்மை என்றும் உயர்வுபெறும்" எனும் கவிதைத் தொகுதி சாகித்ய மண்டலம் பரிசு பெற்றுள்ளதும் பெருமையளிக்கக்கூடியதாக அமைவதோடு இந்நூலும் அத்தகுதியினைப் பெறலாம் என்றும் நம்பலாம்.

நயமிக்க கவி வரிகளில் அதியச்சமாக கருத்துக்களை உள்ளடக்கி இளமையான கவிகளைப் பிறப்பாக்கம் செய்வது கைதேர்ந்த ஒரு கவிஞரின் பண்பாகும். இத்தகைய சிறப்பியல்பு கவிஞர் யோகானந்தன் அவர்களிடம் நிறைந்திருக்கிறது.




உணர்த்துகின்றன. கவிப்புலமையில் உச்சம் தொட்டு நிற்கும் இந்நூலாசிரியரின் கவிகள் மேலாதிக்கமும், பண்மைத்துவ சிறப்பும் பெற்று விளங்குவது போற்றத்தக்கது.

90 பக்கங்களில் கைக்கடக்கமான அழகிய அட்டைப்படத்தும் வெளிவந்திருக்கும் காற்றுக்குத் தூதுவிட்டு கவிநூல் இலக்கிய ஆளுமை அமரர் நந்தினி சேவியர் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நூலுக்கான அணிந்துரையினை பேராசிரியர் ஏ.எப்.எம். அஷ்ரப் (மொழித்துறை, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில்) அவர்கள் மிகச் சிறப்பாக வழங்கியுள்ளமை நூலின் உள்ளடக்க உயர்வுகளை வெளிச்சமிட்டுக் காட்டுவதாய் அமைகின்றது.

நூலாசிரியர் பற்றிய குறிப்புகளை டாக்டர் அருமைநாதனம் சதீஸ்குமார் வழங்கியுள்ளார். மேலும் நூல் பற்றிய உரைகளை பேராசிரியர் அமரர் செ.யோகராசா (முன்னாள் மொழித்துறைத் தலைவர், கிழக்குப் பல்கலைக் கழகம்) மற்றும் ராஜகவி ராஹில் போன்றோரும் உரை வழங்கி சிறப்பித்திருக்கின்றனர்.

2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள இந்நூலின் முதற் கவிதையாக காற்றுக்குத் தூதுவிட்டு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காற்றோடு கலந்த இவரின் எண்ணக்கருக்கள் வாசகரை சென்றடைவதில் வெற்றிபெறுகின்றது. எல்லாமே சிறப்பான சிந்தனையின் வெளிப்பாடு.

வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புகள், கனவுகள், ஆசைகள் எதுவும் தீராமல் அவர்கள் தொடர்ந்தும் தாகத்துடனே இருப்பதாக "தேசம்" எனும் கவிதை சுட்டுகிறது. தனது உள்ளத்துக் கிடக்கைகளை அழகாக வெளிப்படுத்துகின்றார் கவிஞர் இக்கவிதையில்,

தேசத்தேர்
உருண்டுசென்று
சிலருடைய சில்லறைகளில்
சிக்கிச் சிக்கிச்
சிறைப்பட்டுத் தவிக்கிறது....

கடந்து போன காலங்கள் எதிலும் தனது எண்ணத்தை சொல்ல முடியவில்லை என கவலைப்படுகின்றார். "இதயத்தின் அதிர்வுகள்" இறுக்கமான மாற்றங்களைத் தந்துபோவதை அவரால் ஜீரணிக்க முடியாமலிருக்கிறது. "துணிவிழந்து போன பிஞ்சு மனது" என ஒரு கட்டத்தில் கவிஞர் குறிப்பிடுவது மிகவும் இரசிக்கும் படியாக உள்ளது.

என் எண்ணத்தை(ச்)
சொல்வதற்கு -
எத்தனை காலம்
காத்திருந்தேன்

இதயத்தின் அதிர்வுகள்
உயிர் துளைத்து -

"கொடுமை" என்ற கவிதை சிந்திக்கத் தூண்டும் சிறப்பான வரிகளால் உருவாக்கம் பெற்றிருக்கிறது. கவிஞர் இதன் மூலமாக தனது கவித்துவ திறமையை வெளிப்படுத்துகின்றார் மிக அழகாக, ஏழ்மையின் கொடுமைகள் மனித வாழ்வியலை எப்படியெல்லாம் புரட்டிப் போடுகிறது என்பதை கவிதை தத்ரூபமாக விளக்குகிறது.

உடைந்தநிலவு
வந்து பாடுகிறது...
மெல்லிய தென்றல்

இலைகளின் நடுவே
உறங்குகிறது -
மல்லிகை மலர்கள்
சத்தமில்லாமல்

"பூமி ஒருநாள் சிதைந்துபோகும்" என்று தொடங்கும் கவிதை எந்தக்காலத்திற்கும் ஏற்ற பொருத்தப்பாட்டினை உள்ளடக்கியதாய் அமைந்துள்ளது. மனித அவலங்களும், கொடுமைகளும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. மாந்தரின் வாழ்வு மயானமாகிப் போவதைக் குறிப்பிடும் கவிஞர் "உணவுக்காய் ஆயிரம் கைகள் மேலெழும்" என்ற வரிகளின் மூலம் கண்ணீர்த் துளிகளை உருண்டோடச் செய்கின்றார்.

பூமி ஒருநாள்
சிதைந்து போய் -
பூகம்பத்தை பிறப்பிக்கும்...

மானுடத்தைக் கண்டு
வானம் கண்ணீர்சிந்தும்
உருவங்கள் சிதைந்து போகும்...

இவ்வாறாக ஒவ்வொரு கவிதையும் வாழ்வியல் அனுபவங்களை புதுப்புது அர்த்தங்களாகத் தந்து நிற்கின்றன. ஒரு கவிஞராக அவரது பணி சிறப்பாக அமைந்துள்ளது. கவிஞரின் உணர்வுகளும் துமுறல்களும் சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளது. கவிஞர் யோகானந்தன் அவர்களுக்கு எனது வாழ்த்துகள்.

# இப்படிக்கு கணவன்

நான் வரவில்லை என்று
கவலைப்பட வேண்டாம்
வயிற்றுக்கென்ன தெரியும்
உன் நேசமும் பாசமும்

நீ மாசமாக இருந்தபோதும்
இப்படித்தான் காத்துக் கிடந்தாய்
பிள்ளையும் பாரமில்லாமல்தான்
பிறந்தே இருந்தது

கொஞ்சம் தயிரை
சீலையில் பொதிந்து
தொங்க விட்டிருந்தேன்
முழுமையாக நீயே
அதனையும் சாப்பிடு தூங்கலாம்

அழுது கொள்வதென்றாலும்
ஆத்ம பலம்வேண்டும்
எழுதிக் கொண்டிருக்க
எனக்குப் பிடிக்கவுமில்லை
இனி வராமலே நானும்
இருந்தும் விடலாம்
என்பதற்கேனும்
எழுத வேண்டியதாயிற்று.

ரமழான் உனக்கும்
எனக்கானதும் மட்டுமல்ல
ஏழைக்கும் பணக்காரனுக்கும்
பொதுவானது
இயன்றவரை பிடிததுக்கொள்
நானும் அப்படியே

கூறைப் பிடவையாய்
நான் கொண்டு வந்த
சிவப்பு சாரி மட்டும்
சாயம் போகாமல்
உன்னைப் போலவே இருக்கிறது
இரண்டாகக் கத்தரித்து
உனக்கும் பிள்ளைக்குமான
உடுதுணியாகத் தைத்துக் கொள்

வரமுடிந்தால்...
பெருநாள் புத்தாடையாக
பாவாடையும் ஒரு பாலாடையும்
வாங்கி வருவேன்
வேறென்ன முடியும்
எனது வருவாய்க்குள்.

உன் உணர்ச்சியில் பெருகும்
தேனையாவது சேமித்து வை
பெருநாள் தினத்தன்று
உதடுகளால் பரிமாறிக்
கொள்வோம் !

– எழுகவி ஜலீல்.–

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

(ஹராம்) என்று இஸ்லாமிய அறிஞர்கள் ஒருமனதாக ஏற்றுக் கொள்கிறார்கள். கழுவுதல் (குஸ்ல்), கஃபன் (கஃபன்) மற்றும் தொழுகை (ஜனாசா) உள்ளிட்ட இஸ்லாமிய சடங்குகளைப் பேணி அடக்கம் செய்வதற்கே முஸ்லிம்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அடிப்படை உரிமையை மீறி மேற்கொள்ளப்பட்ட இந்த பலவந்த எரிப்பு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆழமான மன உளைச்சலையும் ஆத்மார்த்தமான காயங்களையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் அவர்களின் அன்புக்குரியவர்களுக்காக துக்கத்தை வெளிப்படுத்தவும் இறுதி சடங்குகளைச் செய்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

"(பூமியாகிய) அதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம் அதனுள்ளேயே நாம் உங்களை மீட்டுவோம் இன்னும், அதிலிருந்தே நாம் உங்களை மீண்டும் வெளிப்படுத்துவோம்." (குர்ஆன் 20:55) என்ற இறைவனின் கட்டளைப்படி அடக்கம் செய்வதும் மீண்டும் மண்ணுக்கே சமர்ப்பிப்பதும் ஒரு சன்மார்க்கக் கடமை என்று இஸ்லாம் கற்பிக்கிறது. இதைப் புறக்கணிப்பதன் மூலம், மதச் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித கண்ணியம் இரண்டுமே மீறப்படுகிறது.

இந்த வேதனையான அநீதியை ஞாபகப்படுத்தும் வகையில் வகையில் , மார்ச் 31 ஆம் தேதியை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான பிரார்த்தனைக்கும் , உணர்வுகளை பிரதிபலிப்பதற்கும் ஆதரவு வழங்குவதற்குமான நாளாக அனுஷ்டிப்பதற்கு அனைத்து சமூகங்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம்,

இந்த நாளில்,கண்ணியமாக அடக்கம் செய்வதற்கு மறுக்கப்பட்டவர்களின் ஆன்மாக்களுக்காக பிரார்த்தனை செய்யுங்கள்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களை அணுகி ஆறுதலையும் , ஆதரவையும் நட்புறவையும் வெளிப்படுத்துங்கள்..

இழப்பிலிருந்தும் அதன் பாதிப்புக்களில் இருந்தும் வெளியே வருவதற்குப் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு உணர்வு ரீதியான ஆதரவையும், சட்ட வழிகாட்டல்கள் மற்றும் சாத்தியமான உதவிகள் மூலம் அனைத்து வழிகளிலும் உதவி வழங்குங்கள்.

செய்த தவறுக்கு பரிகாரம் தேடி , அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதன் மூலம் நாங்கள் பிராயச்சித்தம் தேடுவோம்.

கட்டாய தகனக் கொள்கை பின்னர் மாற்றப்பட்டாலும், துயரங்கள் மாறாமலேயே இருக்கின்றன.. ஒரு தேசமாக, இந்த அநீதியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், இதுபோன்ற மீறல்கள் மீண்டும் ஒருபோதும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும், மேலும் இரக்கத்துடனும் ஒற்றுமையுடனும் ஒன்றாய் இணைந்து நிற்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரவும், அவர்களது குடும்பங்களுக்கு துணை நிற்கவும், ஒவ்வொரு தனிநபரினதும் கண்ணியம் வாழ்விலும் மரணத்திலும் மதிக்கப்படுகின்ற எதிர்காலத்தை உறுதியளிக்கவும் நல்லெண்ணம் கொண்ட அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

ஒரு தேசமாக நாம் இன, மத மற்றும் மொழிப் பன்மைத்துவத்தைக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு இலங்கையரும் ஒவ்வொரு குடிமகனின் கண்ணியத்தையும் மத நம்பிக்கைகளையும் பாதுகாக்க உறுதி பூண வேண்டும்.

ஏப்ரல் 6 ஆம் தேதி காலை 10 மணிக்கு கொழும்பு 6 இல் உள்ள மரைன் கிராண்ட் மண்டபத்தில் பல இனங்களினதும் சங்கமத்துடன் ஒரு நினைவு நிகழ்வு திட்டமிடப்பட்டுள்ளது.

**அஸ்-ஷேக் எம்.எச்.எம். புர்ஹான் பஹ்ஜி (அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் தலைமை நிர்வாக அதிகாரி) தலைவர்**

# காத்தான்குடி பாடசாலையில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மண்டபத்தில் மாணவர்களுக்கு அநீதி



(எம்.பஹுத் ஜுனைட்)

காத்தான்குடி மத்திய கல்லூரியில் 2024 கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் செவ்வாய்க்கிழமை (18) தமிழ் பாட பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு பரீட்சை மண்டபத்தில் அநீதி இழைக்கப் பட்டுள்ளது.

வினாத்தாள்களுக்கு வழங்கப்பட்ட நேரத்தை மட்டுப்படுத்தி ஒரு மணித்தியாலமும் நாற்பது நிமிடங்கள் கால அவகாசம் இருந்தும் அவை மறுக்கப்பட்டு விடைத்தாள்களை பரீட்சை மண்டபத்தில் கடமையாற்றிய மேற்பார்வையாளர்களால் பெறப்பட்டுள்ளது.

இதனால் மாணவர் முழுமையாக பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்க தவறியுள்ளதுடன் மனஉளைச்சலுக்கும் உள்ளாகி யுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் காத்தான்குடி மத்திய கல்லூரியில் இரண்டு பரீட்சை மண்டபங்களில் பரீட்சைகள் நடைபெற்ற போதிலும் ஒரு மண்டபத்திலே இவ்வாறு அநீதி இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் தங்களது புள்ளிகள் மற்றும் பெறுபேறுகள் குறைவடையளாம் என்றும் தமிழ் மொழி பாடமானது மிக முக்கியமானது என்றும் தங்களது எதிர்காலம் இதனால் பாதிப்படையலாம் என்றும் முழுமையாக புள்ளிகளை வழங்குவதன் மூலம் இதற்கான நீதி வழங்கப்பட வேண்டும் என இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பெற்றோரும் மாணவர்களும் நீதி கோரி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக நீர் தின போட்டியில் அப்ரிதாவுக்கு முதலிடம்



(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம் )

உலக நீர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் அனுராதபுரம் கம்பிரிகஸ்வெவ மனாருல் உலூம் மகா வித்தியாலய மாணவி எம்.ஆர். பாத்திமா அப்ரிதா முதலிடம் பெற்றுள்ளார். இவருக்கான விருது வழங்கும் நிகழ்வு (21) கொழும்பில் நடைபெற்ற போது பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விருது வழங்கி கௌரவித்த போது பிடிக்கப்பட்ட படம்.

# லேக்ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸின் வருடாந்த இப்தார் நிகழ்வு








(அஷ்ரப் ஏ சமத்)

லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் அங்கத்தவர்கள் ஏற்பாடு செய்த வருடாந்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு லேக் ஹவுஸ் மஜ்லிசின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஷம்ஸ் பாஹிம் தலைமையில் (20) நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு தேசிய நல்லிணக்க பிரதியமைச்சர் அஷ்ஷேக் முனீர் முலபர், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, லேக்ஹவுஸ் தலைவர் காமினி வர்சுமான, பணிப்பாளர் சிசிர யாப்பா மற்றும் தினகரன், டெய்லி நியூஸ், தினமின பத்திரிகைகளின் ஆசிரியர்கள், மற்றும் ஊடகவியலாளர்கள். லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தார் சௌக்கத் அலி பறூஸ்



திருகோணமலை மூதூர் நடுத்தீவு பிரதேசத்தைச் சேர்ந்த மௌலவி சௌக்கத் அலி பறூஸ் (நத்வி) மூதூர் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வைத்து மாவட்ட நீதிவான் வ.ஆ. தஸ்னீம் பௌசான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சௌகத் அலி.கயாதும்மா தம்பதிகளின் அன்பு புதல்வர் ஆவார்.மூதூர் திஃசதாம் வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியில் அல்.ஆலிம் பட்டம் பெற்றவர். இலங்கை இதழியல் கல்லூரியில் ஊடக கற்கையை பூர்த்தி செய்த இவர் விடிவெள்ளி , உதயம் பத்திரிகைகளின் செய்தியாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாநகர சபையில் சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்வு





(எம்.ஐ.அப்துல் நஸார்)

மட்டக்களப்பு மாநகர சபையில் வருடாந்தம் இடம்பெற்று வருகின்ற சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்வு வழமை போன்று இம்முறையும் மாநகர உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மேற்படி இப்தார் நிகழ்வு மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் முஸ்லிம் உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் கடந்த வியாழக்கிழமை (20) மாநகர ஆணையாளரும், மாநகர உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைவருமான என். தனஞ்ஜெயன் தலைமையில் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

வந்தாறுமூலை, இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அஷ்ஷெய்க் எஸ்.எல். எம்.நஷ்மல் (பலாஹி) இந் நிகழ்வின் விசேட பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந் நிகழ்வில் இஸ்லாமிய வர்த்தகர்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் சமூக செயற்பாட்டா ளருமான கே.எம்.எம்.கலீல் (டீபிலால் ஹாஜியார்), மட்டக்களப்பு சலாமா பெண்டேசன் நிறுவனத்தின் தலைவர் அல்ஹாஜ் மொஹமட் ஹமீட், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம கணக்காளர் எம்.ஏ.எம்.ஸூ ஹைர், மாநகர பொறியியலாளர் சித்ராதேவி லிங்கேஸ்வரன், மட்டக்களப்பு மாநகர கால்நடை வைத்தியர் சீ. துஷ்யந்தன், இயந்திரப் பொறியியலாளர் என். யோகேந்திரன் உட்பட மாநகர சபையின் பகுதித் தலைவர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரி மாணவி தேசிய போட்டியில் வெள்ளிப் பதக்கம்



(எம்.எச்.எம்.சியாஜ்)

அகில இலங்கை ரீதியில் பௌதீகவியல் ஒன்றியத்தினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட இளையோர் அறிவியல் ஒலிம்பியாட் போட்டியில் புத்தளம் பாத்திமா கல்லூரியின் சாதாரண தர மாணவி எம்.எச் அயிஷா அனத் வெள்ளிப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவருக்கான பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (16) கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றிருந்தது.

# சம்மாந்துறை பிரதேச சபையை அறுதிப்பெரும்பாண்மையில் கைப்பற்றுவோம்

## உதுமான்கண்டு நாபீர் உறுதி மொழி!





(நிஸா இஸ்மாயீல் )

எதிர் வருகின்ற 2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபையை இலக்காகக் கொண்டு களமிறங்கும் நாபீர் பவுண்டேஷனின் சுயேட்சை குழு சம்மாந்துறை பிரதேச சபையை அறுதிப் பெரும்பாண்மையில் கைப்பற்றும் என அதன் தலைவர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் தெரிவித்தார்.


உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுவினை (19) நாபீர் பவுண்டேஷனின் அரசியல் செயற்பாட்டாளர் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம். எல்.துல்கர் நயீம் உடனான குழு அம்பாறை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சியாளர் அலுவலகத்தில் வேட்பு மனுவை கையளித்த சந்தர்ப்பத்தில் அதன் தலைவர் உதுமான் கண்டு நாபீரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர் வருகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தேசிய கட்சிகள் சிறுபான்மை கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் என கூடுதலான போட்டிகள் நிலவுகின்ற போதும் கடந்த 32 வருட காலமாக நாங்கள் செய்த சேவை நிமித்தம் மக்களிடம் நாங்கள் ஆணையைக் கேட்டு நிற்கின்றோம். இனம் மதம் கட்சி வேதம் பாராமல் பரவலாக மக்களுக்கு செய்த சேவைகளின் அடிப்படையில் இம்முறை குறித்த சம்மாந்துறை பிரதேச சபையை மையமாகக் கொண்டே நாங்கள் களமிறங்குகின்றோம். இதன் வெற்றியின் அடிப்படையில் எதிர் வருகின்ற காலங்களில் எமது அரசியல் பரவலடைந்து செல்லும் என்பதை இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த கால சேவைகளை அரசியலின் அடிப்படையில் வியாபிக்க வேண்டும் என்பதே எமது பூரண இலக்காக காணப்படுகின்றது. அதற்காக எனது மக்கள் எனக்கான அரசியல் அதிகாரத்தை தருவார்கள் என்ற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.



2025 ஆம் ஆண்டுக்கான எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், முதன்மை வேட்பாளராக, தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் கேகாலை மாவட்டத்தில், மாவனல்லை நகர சபைக்கு இளம் சமூக சேவையாளரான அன்ஷாப் நஸீர் தனது வேட்பு மனு பத்திரத்தில் கையொப்பம் இடுவதனை படத்தில் காணலாம். **(படம்: பாரா தாஹிர்)**

# வை.எம்.எம்.ஏ.பேரவையின் இப்தார் நிகழ்வு





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் முன்னணியின் (YMMA) இப்தார் நிகழ்வு நேற்று (18) முன்னணியின் தேசியத் தலைவர் அம்ஹர் ஷெரிப் தலைமையில் முன்னணியின் தலைமைக் காரியாலயத்தின் ஏ.எம்.ஏ. அஸீஸ் மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்விற்கு பிரதம அதிதியாக பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியும் கௌரவ அதிதிகளாக துருக்கி நாட்டின் தூதுவர் மற்றும் மாலை தீவு நாட்டின் கவுன்சிலர் அலி சரீப் ஆகியோரும், சிறப்பு அதிதிகளாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, அறிவியல் மற்றும் தொழிநுட் அமைச்சின் செயலாளர் வை.எல். எம்.நவவி, முன்னணியின் வமய விவகாரப் பிரிவு தலைவர் பௌஸான் அன்வர் முன்னணியின் முன்னாள் தலைவர்கள், செயலாளர்கள், நாடளாவிய ரீதியில் உள்ள அங்கத்தவர்கள், உலமாக்கள், மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# கல்ஹின்னையில் இன நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விஷேட இப்தார் நிகழ்வு





(இக்பால் அலி )

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் கல்ஹின்னைக் கிளை ஏற்பாட்டில் இன நல்லிணக்கத்தை மேம்படுத்தும் விஷேட இப்தார் நிகழ்வு அன்கும்புர முகையதீன் ஜு/ம்ஆப் பள்ளிவாசலில் விவாகப் பதிவாளரும் கிளையின் தலைவருமான கே. எம். மபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் தேசிய அமைப்பின் தலைவருமான சஹீட் எம். ரிஸ்மி கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதில் கண்டி மாவட்ட செயலகத்தின் முஸ்லிம் சமய கலாசார உத்தியோகத்தர் முஹமட் சாலிஹ், இஹலமுல்ல சோமனாந்த பிரிவினாபதி ஸ்ரீராஸ்டாவேதி பண்டித வயம்ப பலாத சங்கநாயக குனானந்த தேரர். இன நல்லிணக்க சபையின் தலைவர் மல்லவ, வெல்கால விஹாராதிபதி ஞானசரி ஹிமி, அங்கும்புர உடவத்தை கோயிலின் பிரதான குரு விக்னேஸ்வர சர்மா, சிங்கள, தமிழ், கிறிஸ்தவ சர்வ சமயத் தலைவர்கள், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் முக்கியஸ்தர்கள் ,அரச நிறுவனங்களின் அதிகாரிகள் அங்கும்புர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சுகாதாரப் பரிசோதர்கள், அரசியல் பிரமுகர்கள், அங்கும்புர வியாபார சங்கத்தின் தலைவர், முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் தலைவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணி தலைவர் ஜௌபர் காலமானார்

(பீ.எம் முக்தார்)



களுத்துறை நகர சபை முன்னாள் தலைவரும், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன தலைவருமான அல்-ஹாஜ் எம்.எம்.எம் ஜௌபர் (ஜே.பி) 19ஆம் திகதி களுத்துறையில் காலமானார்.

ஐந்து பிள்ளைகளுக்கு தகப்பனான இவருக்கு வயது 70 ஆகும்.

அன்னாரின் ஜனாஸா கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை ளுஹர் தொழுகையுடன் களுத்துறை முஹியித்தீன் ஜும்ஆப் பள்ளிவாசல் (தெருவுப்பள்ளி) மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மர்ஹூம் முஹம்மத் மஹ்றூப் தம்பதிகளின் புதல்வரான இவர் பல வருட காலமாக முஸ்லிம் விவாகப் பதிவாளராகவும் கடமையாற்றினார்.

25 வருட காலமாக அரசியலில் ஈடுபட்ட மர்ஹூம் ஜௌபர் களுத்துறை நகர சபை தலைவராக ஒரு முறையும், உப தலைவராக இரு தடவைகளும், உறுப்பினராக இரு தடவைகளும் பதவி வகித்து களுத்துறை நகரை கட்டியெழுப்ப இன,மத,மொழி,கட்சி,பிரதேச வேறுபாடுகளின்றி நீதியாகவும், நேர்மையாகவும் சேவையாற்றி மக்கள் நன்மதிப்பினை சம்பாதித்துக் கொண்டார்.

களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன தலைவராக மரணிக்கும் வரை பதவி வகித்த இவர் இவ்வமைப்பினூடாக மாவட்ட முஸ்லிம்களின் விமோசனத்திற்காக பாரிய பணிகளைச் செய்துள்ளார்.

# ஓட்டமாவடி பிரதேச செயலக இப்தார் நிகழ்வு





(எஸ்.எம்.எம்.முர்ஷித்)

ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு (21) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரும் நலன்புரி அமைப்பின் தலைவருமான ஏ. தாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்தார்.

கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். ரீ.எம்.றிஸ்வி நோன்பின் மகத்துவமும் இன நல்லுறவும் என்னும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.ஏ.அமீர், கல்குடாஉலமா சபை நிருவாகிகள், இராணுவ உயர் அதிகாரிகள், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, பிரதேச செயலக தமிழ் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





அனுராதபுரம் இஹலப்புளியங்குளம் அந் நஹ்லா அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு அஹதிய்யாவின் அதிபர் தேசமான்ய எம்.ஆர்.எம்.ரனிஸ் , மௌலவி பீ.ஜாயிஸ் (உஸ்வி) ஆகியோர் தலைமையில் அந்நஹ்லா கல்வி மத்திய நிலையத்தில் (16) நடைபெற்றபோது.... **(படம்: எம்.ரீ.ஆரிப்)**

# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் மற்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் இடையே முக்கிய சந்திப்பு!



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங்கை (26) கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன், எமது நீண்ட கால தொடர்புகள் மற்றும் நிலைபேறான தன்மை குறித்து ஆக்கபூர்வமான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது, புனித ரமலான் மாதத்தில், காசா மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும் துயரங்கள் மற்றும் உயிரிழப்புக்கள் தொடர்பிலும் எமது ஆழ்ந்த கவலையை தூதுவரிடம் வெளிப்படுத்தினோம்.

மேலும், மனிதாபிமான விடயங்களை முன்னிறுத்தியும் உலக அமைதிக்காகவும் அமெரிக்கா தனது ஆதரவினை வழங்க வேண்டும்" எனவும் அவர் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பெருந்தொகையானோர் பங்கேற்புடன் முஸ்லிம் திணைக்களத்தில் இப்தார் நிகழ்வு



**(ஏ.எஸ்.எம்.ஜாவித்)**





முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இப்தார் நிகழ்வு திணைக்களத்தின் ஏற்பாட்டில் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் தலைமையில் (26) இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதி சபாநாயகர் ரிஸ்வி ஷாலி, பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதீர, கத்தோலிக்க சமய விவகார திணைக்கள பணிப்பாளர், இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர், ஹஜ் குழு உறுப்பினர்கள், வக்பு சபை உறுப்பினர்கள், திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்கள், பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்கள், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபை பிரதிநிதிகள், பள்ளிவாசல்கள் சம்மேளன உறுப்பினர்கள், இந்து காலசார மற்றும் கத்தோலிக்க சமய விவகார திணைக்கள அலுவலர்கள் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மத்றஸா மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு



கஹட்டோவிட்ட ஜாமிஉத் தௌஹீத் ஜூம்ஆ பள்ளிவாயிலில் இயங்கி வரும் அல் மத்றஸதுல் இஸ்லாமிய்யா பகுதி நேர குர்ஆன் மதரஸாவில் அண்மையில் (27) பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

ரமழான் பருவ கால போட்டி நிகழ்ச்சியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு, ரமழான் காலத்தில் விஷேடமாக இடம்பெற்ற தரம் 7-11 வரையான மாணவர்களுக்கான நான்கு நாள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கல், 2024 ஆம் ஆண்டு மதரஸா கல்வியை பூர்த்தி செய்து இம் மதரஸாவிலிருந்து பிரியாவிடை பெற்றுச் செல்லும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிழ்வுகள் என்பன அதிபர் அஷ்ஷெய்க் இனாமுல்லாஹ் (ஸலபி) தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் மத்றஸாவின் தலைவரும் இப் பள்ளிவாயிலின் உபதலைவருமான அல்ஹாஜ் அஷ்ஷெய்க் எம்.என்.எம்.பைரூஸ்(கபூரி), செயலாளர் அல்ஹாஜ் எம். என்.எம்.ஜௌஸி,பொருளாலர் முஹம்மத் ஸப்ராஸ், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# டாக்டர் ரிஷாதுக்கு கௌரவம்



இலங்கையில் முதல் தடவையாக மகப்பேற்று மற்றும் பெண் நோயியல் மருத்துவ பேராசிரியராக முஸ்லிம் சமூகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட டாக்டர் முஹம்மது ரிஷாதை கௌரவித்து சின்னம் ஒன்றை வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு "முவீன் பிக்" ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது ஏ.எம்.வை.எஸ்.நிறுவனத்தின் பணிப்பாளரும், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் உதவிப் பொதுச் செயலாளருமான மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம் சின்னத்தை கையளித்ததோடு கௌரவ பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி ஸாலி மற்றும் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் ஆகியோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மு.கா வில் இணைந்த மயில் வேட்பாளர்



**(கே. எ. ஹமீட்)**

அட்டாளைச்சேனை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உச்ச பீட உறுப்பினரும், அமைப்பாளருமான தொழிலதிபர் ஏ.கே.அமீர் கடந்த வியாழக்கிழமை (27) ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டதுடன், எதிர்காலத்தில் அம்பாரை மாவட்டத்தில் கட்சியின் வளர்சிக்கு முழு மூச்சாக தானும் தனது ஆதரவாளர்களும் செயற்படுவதாக உறுதியளித்திருந்தார்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.எஸ். உதுமாலெப்பை, கட்சியின் உயர்பீட உறுப்பினரும் தேசிய பொருளாலருமான றஹ்மத் மன்சூர் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் அம்பாரை மாவட்ட செயலாளருமான ஏ.சி.சமால்தீன், பாலமுனை அமைப்பாளருமான ALM. அலியார் ஆகியோருடன் அமீரின் ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டாரிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி வேட்பாளர்களுக்கு செலவு அறிக்கை தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு



**(எம். எச். எம். சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான செலவு அறிக்கையிடல் தொடர்பான தெளிவூட்டும் செயலமர்வு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் (26) இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் காரியலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் கால செலவு அறிக்கைகள் எவ்வாறு தயார் செய்யப்பட வேண்டும், அதற்கான விதிமுறைகள் மற்றும் அவைகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிப்பதன் ஊடாக வேட்பாளர்கள் தம்மை சட்ட சிக்கல் ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள முடியும் போன்ற விடயங்கள் பற்றி தெளிவூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரியதர்ஷனியின் குற்றச்சாட்டுக்கு எதிராக ரிசான் முஹம்மத் சீ.ஐ.டி.யில் முறைப்பாடு

மன்னார் மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் காணிகளை அபகரிப்பு செய்வதாக செய்தியாளர் சந்திப்பில் வைத்து மன்னார் பேசாலையினை சேர்ந்த பிரிதர்ஷனி ரொட்ரிகோ என்ற பெண் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு எதிராக சேக் ரிசான் முஹம்மத் அமானி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
தமது சட்டத்தரணி அயிஸ்மன்த கயான் சகிதம் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வருகை தந்த சேக் ரிசான் முஹம்மத் அமானி இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.
அவர் தொடர்ந்தும் கூறுகையில்... மேற்படி பெண்மணியின் குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பானது, எனது தந்தை காணி கொள்வனவு மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவருகின்ற ஒருவராக இருந்தார்.
நான் கடந்த 10 வருட காலமாக மேற்படி தொழிலினை செய்துவருகின்றேன். என்னுடைய நேர்மையான தொழில் முன்னேற்றத்தினை சகித்துக் கொள்ள முடியாத சிலர் இவ்வாறு எனக்கு எதிராக சமூக வளைத்தளங்களில் போலி பிரசாரங்களை செய்துவருகின்றார்.
இது தொடர்பில் நான் எனது சட்டத்தரணி சகிதம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றினை செய்துள்ளேன். இதற்கு நிச்சயம்



நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. உண்மை,நேர்மை நிச்சயமாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது. குற்றப் புலனாய்வு திணைக்களம் இது தொடர்பில் எனக்கு நியாயத்தை பெற்றுதரும் என நம்புகிறேன் என்றார்.

# சூபித்துவ அடிப்படைவாதிகள் கல்முனையில் வீண் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி

கல்முனை முஸ்லிம் மக்கள் கடந்த 40 வருடங்களாக எவ்வித சமய மோதல்களும் இன்றி ஐக்கியமாக உள்ள நிலையில் சில சூபித்துவ அடிப்படைவாதிகள் வீண் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என ஸ்ரீலங்கா ஜம்மியத்துல் உலமா கவுன்சில் தெரிவித்துள்ளது.
இங்கு தவ்ஹீத், சுன்னத் ஜமாத், தப்லீக் என்றெல்லாம் இயக்கங்கள் பல இருந்தாலும் பொது மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.
ஆனால் அண்மைக்காலமாக இப்பகுதியில் சூபித்துவ அடிப்படைவாதம் வளர்வதை காண முடிகிறது. அவர்கள் இளைஞர்களை கல்வி கற்பதிலிருந்து தூரப்படுத்தி காட்டு வாழ்க்கைக்கு வழி காட்டி ஒரு வித வெறியை ஊட்டுகின்றனர்.
ஒரு தரப்பின் கருத்தை மற்றவர்கள் மீது திணிப்பதுதான் அடிப்படை வாதமாகும்.
அந்த வகையில் சிலர் இவ்வாறு சூபித்துவ அடிப்படை வாதத்தை ஊட்டி மக்கள் மத்தியில் மோதலை உண்டாக்கும் விதத்தில் இளைஞர்களை வழி கெடுக்க



முயல்கின்றனர். இவர்களின் நோக்கம் ஊரை ஒற்றுமைப்படுத்துவதல்ல, ஊரை பிரித்து மோதலை உருவாக்குவதாகும்.
இது எதிர்காலத்தில் ஆயுத மோதலையும் உருவாக்கலாம்.
ஆகவே இளைஞர்கள் இத்தகைய அடிப்படைவாதிகளின் பின்னால் போகாமல் சகலருக்குமான கருத்துக்கும், வழிபாட்டு சுதந்திரத்துக்கும் மதிப்பதுடன் சமயவிடயங்களை பேச தங்கள் உலமாக்களிடம் விட வேண்டும் என ஸ்ரீலங்கா ஜம்மியதுல் உலமா கவுன்சில் கேட்டுக்கொள்கிறது.

முபாறக் முப்தி.
தலைவர்.
ஸ்ரீலங்கா ஜம்மியதுல் உலமா கவுன்சில்

# சீனன் கோட்டை முத்துக்கள் வாட்ஸ் அப் குழுமத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு





சீனன் கோட்டை முத்துக்கல் வாட்ஸ் அப் குழுமம் இரண்டாவது தடவையாக ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வின் இறுதியில் பலஸ்தீன காஸா மக்களுக்காகவும் துவா பிரார்த்தனை மேற்கொள்ளப் பட்டமை இங்கு விசேட அம்சமாகும்.

(பீ.எம்.முக்தார்)
பேருவளை பகுதியில் பாரிய அளவில் கல்வி,சமய, சமூக மற்றும் பொதுப் பணிகளை மேற்கொண்டு வரும் சீனன் கோட்டை முத்துக்கள் வாட்ஸ் அப் குழுமத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வும் உறுப்பினர்களுக் கான ஒன்று கூடல் வைபமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (23) பேருவளை மரக்கலா வத்தை ஸிமி பூல் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.
இக் குழுமத்தின் ஒருங்கிணைப்பாளர் ராமிஸ் நாஸிம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சீனன் கோட்டை எகொட வத்தை தாருல் உலூம் ஸாவியா மஸ்ஜிதின் பிரதம இமாம் மௌலவி முகத்தமுஷ்ஷாதுலி எம்.எம்.அன்வர் பாச்சா (சர்க்கி) விசேட பேச்சாளராக கலந்து கொண்டார்.
இக் குழுமத்தின் முக்கிய உறுப்பினர்களான பேருவளை நகர சபை சுயேட்சை அணி தலைமை வேட்பாளர் அல்-ஹாஜ் அஸாம் பளீல் மற்றும் அல்-ஹாஜ் ஜே.எம்.எம்.முஹம்மத் ஸாலி உட்பட உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# ஹைறாத் அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான இப்தார் நிகழ்ச்சி



(பாரா தாஹீர்)
அரநாயக்க திப்பிட்டிய மஜ்மஉல் ஹைறாத் அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான இப்தார் நிகழ்ச்சி வில்பொல ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது.
இவ் நிகழ்வில் இப்தார் பயானை மாவனல்லை ஆயிஷா சித்தீக்கா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளரும் வில்பொல ஜும்ஆ மஸ்ஜிதின் பேஷ் இமாமுமாகிய அஷ்சேக் அல் ஹாபிழ் முஜாஹிதீன் (மஹ்ழரி) நிகழ்த்தினார்.



இதில் அஹதிய்யா பாடசாலை மாணவ மாணவியர், மஸ்ஜித் இமாம்கள்,முஅல்லிம் மற்றும் முஅல்லிமாக்கள்,பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஸ்கை தமிழ் ஊடகத்தின் இப்தார் நிகழ்வு









(ஏ.எச்.எம். ஹாரீஸ்)
ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினால் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகப் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் தின் நெறிப்படுத்தலில் சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசலில் வெள்ளிக் கிழமை (28) சிறப்பாக இடம்பெற்றது.
ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் எம்.எஸ்.எம். ஸாகிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் டாக்டர் அல்-ஹாஜ் எம்.எச்.கே.சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.
சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் பொறியியலாளர் எம்.எம்.எம்.முனாஸ் கௌரவ அதிதியாகவும், சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசல் தலைவர் ஓய்வுபெற்ற பொறியியிலாளர் யூ.எல்.எம். அஜிஸ் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டதுடன், ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் செய்தி முகாமையாளர் ஏ.எச்.எம். ஹாரீஸ், பிராந்திய முகாமையாளர் எம்.ஏ.எச்.அஸ்ரி, உறுப்பினர் ஏ.கே.ஹஸான் அஹம்மட், பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊடக அமைப்புக்களின் முக்கியஸ்தர் கள், பிராந்திய செய்தியாளர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.
சாய்ந்தமருது மஸ்ஜிதுஸ் ஸபா பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி எப். எம் றஹ்மத் துல்லாஹ் மௌலவி விசேட துஆப் பிரார்த்தனை நிகழ்த்தினார்.
ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் உறுப்பினர் எம்.எச்.எம்.சிப்ஹான் இப்தார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியதுடன், நன்றியுரையினை ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் உதவி முகாமையாளர் மஹ்ரூப்.எம். ஜபீர் நிகழ்த்தினார்.
இதன் போது கலந்து கொண்ட பிரதம அதிதி, கௌரவ அதிதி மற்றும் விசேட அதிதி ஆகியோர்களுக்கு ஸ்கை தமிழ் குடும்பத்தினால் நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 75

# கொடுப்பதால் கிடைக்கும் சன்மானம்

தேவையுடையவர்களுக்கு கொடுத்து உதவுவதை இஸ்லாமிய சமூகம் ஒரு அழகான வணக்கமாக நோக்குகிறது. வணங்கி வழிபடுவது எவ்வளவு முக்கியமோ அதேபோல வழங்கி வளப்படுத்துவதை அவ்வளவு முக்கியமாக பார்க்கிறது. தேவை உள்ளவர்களுக்கு கொடுத்து உதவுவதை, அவர்களுக்கு வழங்கி வாழவைப்பதை இறைவனுக்கு வழங்கும் அழகான கடன் என்று இஸ்லாம் எங்களுக்கு உறுதியாக எடுத்துச் சொல்லும் பாங்கு அவ்வளவு அற்புதமானது.

இஸ்லாமிய கோட்பாட்டில் “அழகான கடன்“ என்பது ஒருவர் மற்றவருக்கு தன்னலமின்றி, முற்றிலும் தூய்மையான நோக்கங்களுக்காக எதைக் கொடுத்தாலும் அது அழகான கடனை குறிக்கிறது. மனிதன் இந்த மனநிலையில் செலவு செய்வது இறைவனுக்கு கொடுக்கும் கடனாக அமைகிறது.

”குறைவடையாத செல்வங்களுக்கு சொந்தக்காரனான இறைவனுக்கு கடனா?” என்று நாம் கேட்கலாம். தேவையோடு இருக்கும் தன் அடியார்களுக்கு எவர் உதவுகிறாரோ அந்த உதவிக்காக இறைவன் அதைவிட உயர்ந்த சன்மானத்தை வழங்க ஆவலுடன் காத்திருக்கிறான் என்பதை உறுதிப்படுத்தவே இறைவன் இப்படிச் சொல்கிறான்.

கொடுப்பது எங்கள் செல்வத்தில் குறைவை ஏற்படுத்தலாம் என்று மனித மனம் நினைக்கலாம். மனித மனதின் தன்மை அப்படித்தான். அதில் பிழை இல்லை. ஆனால் இறைவனாலே எமக்கு தரப்பட்ட செல்வத்தில் இருந்து கொடுப்பதால் அந்த செல்வம் குறைவடைவதில்லை மாறாக அது நிரந்தர முதலீடாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டுகிறான்.

நாம் கொடுப்பதை கடன் என்று கருதி அதை திருப்பிச் செலுத்துவதாகவும், அதை பல மடங்காக திருப்பிச் செலுத்துவதாகவும் இறைவன் உத்தரவாதம் தருகிறான். இருப்பினும், இந்த கடன் “அழகானதாக“ இருக்க வேண்டும் என்பதே இங்குள்ள நிபந்தனை.

செல்வம் பற்றிய முழுக் கருத்தும் இஸ்லாமியப் பார்வையில் இறைவனின் பரிசாக கருதப்படுகிறது. எங்களுக்கு செல்வத்தை வழங்கிய இறைவன் அதில் ஒரு பகுதியை ஏழைகளுக்காகவும் வைத்திருக்கிறான்.

எனவே எங்கள் செல்வத்தில் ஏழைகளுக்கு உரிமை உண்டு. தேவையுள்ளவர்களுக்கு கொடுத்து உதவுவது என்ற கருத்து இஸ்லாத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது.

தேவையில் இருக்கும் மக்களுக்கு உதவி, ஏழை பணக்காரர்களிடையே சிறந்த உறவை ஏற்படுத்துவதை

இறைவனால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு நல்ல செயலாக கருதி எவர் உதவுகிறாரோ அவர்

இறைவனுக்கு அழகான கடன் கொடுத்தவராக ஆகிவிடுகிறார். மறுமையில் மகத்தான கூலி இருக்கிறது என்பதற்காக அவர் அதை செய்யும் போது அது அழகான கடனாக ஆகிவிடுகிறது.

தேவைப் படுவோருக்கு கொடுப்பது நம் ஆன்மாவை தட்டி எழுப்புவதாகவும், மற்றவர்களின் நலனில் உண்மையான அக்கறையை தூண்டுவதாகவும், பதட்டத்தை தனிப்பதாகவும், நேர்மறை உணர்வுகளை உருவாக்கி, மனத்திருப்தியை அதிகரிப்பதாகவும் நவீன ஆராய்ச்சி சுட்டிக்காட்டுகிறது.

ஆராய்ச்சி இப்படி சொல்லும் போது... தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக ஒருவரின் உதவிப் பொருட்கள் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அவற்றை தூய்மையான மனநிலையில் தியாகம் செய்வது இறை ஆசிர்வாதம் பெறவும் ஆன்மாவையும் செல்வத்தையும் தூய்மைப்படுத்தவும் காரணமாகிறது என்று இஸ்லாமிய உளவியல் எடுத்துக் காட்டுகிறது.

நமக்கு நாமே செலவு செய்யும் போது அதற்கான பலன் அப்போதே கிடைக்கலாம். கிடைக்காமலும் இருக்கலாம். ஒருமுறை பணம் நமது பணப்பையை விட்டு சென்றால் அது திரும்ப வராது என்பது எமக்குத் தெரியும். ஆனால் அல்லாஹ்வின் பாதையில் நாம் செலவு செய்யும் அந்த செலவை கடன் என்று கணித்து அதை பல மடங்கு பெருக்கி விடுகிறான் அந்த கொடையாளன். இதைவிட நாம் எமக்காக செய்கின்ற சிறந்த முதலீடு என்னவாக இருக்கும்?

”எமது தேவைக்காகவும் பாதுகாப்புக்காகவும் உலகின் வரையறுக்கப்பட்ட வங்கிகளில் எங்கள் பணத்தை வைப்பீடு செய்தாலும் அதைவிட அல்லாஹ்வின் வரம்பற்ற வங்கியில் வைப்பீடு செய்வது மேலானது என்பதை அழகான கடன் எனும் இந்த இறை கொள்கை எமக்கு சொல்லித் தருகிறது.

இந்த புனித ரமலான் மாதத்தில் தேவையுடையவர்களை தேடித் தேடி தனிப்பட்ட மற்றும் நிறுவன முறையில் வழங்கி உதவுகின்ற பலரை நாம் காண்கிறோம். இது இஸ்லாமிய சமூகத்தின் சகோதரத்துவத்தின் சிறந்த மனநிலையின் வெளிப்பாடாகும்.

நாம் வணங்கும் மனநிலையில் தூய்மையாக இருப்பது போலவே...

வழங்கும் மனநிலையிலும் தூய்மையாக இருந்து எமது உறவுகளுக்கு உதவிக் கரம் கொடுக்கும் எல்லோருக்கும் உயர்ந்த கூலிகள் கிடைக்க வேண்டும் என்று அருள் இறைவன் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கிறோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




# மனக்கவலை நீங்க சில பயனுள்ள டிப்ஸ்:

**1. நேர்மறை சிந்தனை** (Positive Thinking)
*உங்கள் கவலைகளை எழுதி, அதற்கு தீர்வு என்ன என்பதை பகுப்பாய்வு செய்யுங்கள்.*
*சாதகமான விஷயங்களை நினைத்து மனதை நம்பிக்கை வழி நடத்துங்கள்.*

**2. தியானம் மற்றும் மூச்சுப் பயிற்சி** (Meditation & Breathing Exercises)
*தினமும் 10-15 நிமிடம் தியானம் செய்யுங்கள்.*
*ஆழ்ந்த மூச்சு விடுவது மனஅழுத்தத்தை குறைக்க உதவும்.*

**3. உடற்பயிற்சி** (Exercise)
*நடைபயிற்சி, யோகா, அல்லது ஜிம்மில் ஒருங்கிணைந்த உடற்பயிற்சி செய்யுங்கள்.*
*உடல் இயக்கம் மன அழுத்தத்தை குறைக்கும்.*

**4. பிடித்த விஷயங்களில் ஈடுபடுங்கள்** (Engage in Hobbies)
*உங்களுக்கு பிடித்த கலை, எழுத்து, பாடல், சமையல் போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள்.*
*இது மனதை சோர்விலிருந்து விடுவிக்கும்.*

**5. உங்கள் உணவை கவனிக்கவும்** (Healthy Diet)
*உடலுக்கு தேவையான சத்துக்களை உள்ளடக்கிய உணவை எடுத்துக்கொள்ளுங்கள்.*
*அதிகமாக கஃபின் மற்றும் ஜங்க் ஃபுட் எடுக்காமல் இருங்கள்.*

**6. நல்ல உறவுகளை பராமரிக்கவும்** (Maintain Good Relationships)
*உங்கள் பிரச்சினைகளை நம்பிக்கைக்குரிய நண்பர்கள் அல்லது குடும்பத்தினருடன் பகிருங்கள்.*
*மகிழ்ச்சியான உரையாடல்களுக்கு நேரம் ஒதுக்குங்கள்.*

**7. முடிந்தவரை எதிர்பார்ப்புகளை குறைத்து வாழுங்கள்** (Lower Expectations)
*எல்லாம் நம்மளால் கட்டுப்படுத்த முடியாது என்பதனை உணருங்கள்.*
*நிகழ்வுகளை இயல்பாக ஏற்றுக்கொள்ள பழகுங்கள்.*

**8. நல்ல உறக்கம்** (Good Sleep)
*தினமும் 7-8 மணி நேரம் தூங்குங்கள்.*
*தூங்குவதற்கு முன் மொபைல் அல்லது டிவி பார்ப்பதை குறைத்துவிடுங்கள்.*

**9. உற்சாகமான சூழல்** (Positive Environment)
*உங்கள் அறையை சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துக் கொள்ளுங்கள்.*
*மனதிற்கு அமைதியளிக்கும் இசை கேட்பது நல்லது.*

**10. தியானிக்கவும், நன்றி கூறவும்** (Practice Gratitude)
*தினமும் ஒரு நாள் முடியும் போது, அந்த நாளில் நடந்த சிறந்த விஷயங்களை நினைத்துப் பாருங்கள்.*
*நீங்கள் பெற்ற நல்ல விஷயங்களை பற்றிச் சிந்தித்தால் மனஅழுத்தம் குறையும்.*



# பரீட்சைகள் முடிந்தவுடன் ஓய்வும், மகிழ்ச்சியும்!

*பரீட்சைகள் முடிந்தவுடன் நீங்கள் உங்கள் மனதை ஓய்வாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்துக் கொள்ளலாம். இதோ சில பயனுள்ள மற்றும் மகிழ்ச்சியளிக்கும் செயல்கள்:*

*1. ஓய்வு எடுக்கவும்*
*நல்ல தூக்கத்தை உறுதி செய்யுங்கள்.*
*மனதுக்கு நிம்மதியாக இருக்க நீங்கள் விரும்பும் செயல்களை செய்யுங்கள்.*

*2. பொழுதுபோக்கு*
*புத்தகங்கள் படிக்கலாம், குறிப்பாக நீங்கள் ரசிக்கும் கதைகள்.*

*3. நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் நேரம் கழிக்கவும்*
*வெளியே சென்று நல்ல நேரம் கழியுங்கள்.*
*வீட்டிலேயே ஒன்றாக உணவு சமைத்து மகிழுங்கள்.*

*4. உங்கள் திறமைகளை மேம்படுத்துங்கள்*
*எழுதுவதில் ஆர்வம் இருப்பதால், உங்கள் புதிய கதைகளை உருவாக்கலாம்.*
*லுழரவுரடிந சேனலுக்கு புதிய வீடியோக்கள் தயாரிக்கலாம்.*
*உங்கள் விருப்பமான சமையல் ரெசிப்பிகளை முயற்சிக்கலாம்.*

*5. பயணங்கள் மற்றும் அனுபவங்கள்*
*ஒரு சிறிய ட்ரிப் திட்டமிடலாம்.*
*உங்கள் பகுதிகளில் உள்ள புதிய காபி ஷாப்கள் அல்லது ரெஸ்டாரெண்ட்கள் முயற்சிக்கலாம்.*

*6. எதிர்காலத்தை திட்டமிடுங்கள்*
*உங்கள் அடுத்த கட்ட பயணங்கள் மற்றும் புதிய இலக்குகளை திட்டமிடலாம். உங்கள் புதிய புத்தக திட்டம் அல்லது லுழரவுரடிந கன்செப்ட்கள் குறித்து யோசிக்கலாம்.*
*முக்கியமாக, பரீட்சையின் ப்ரஷர் முடிந்த பிறகு நீங்கள் மகிழ்ச்சியாகவும், ஆர்வமாகவும் இருக்க முயலுங்கள்!*



அரபாத் பஹுர்தீன்

# உதைப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது நடப்புச் சம்பியன் ஆர்ஜென்டினா

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள உதைப்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கு லத்தீன் அமெரிக்கக் கண்டத்திலிருந்து முதல் அணியாக தகுதி பெற்றுக் கொண்டது நடப்பு சம்பியனான ஆர்ஜென்டினா உலகின் அதிகளவான ரசிகர்களை தன்னகத்தே கொண்ட விளையாட்டு தொடராகக் கருதப்படும் உதைப் பந்தாட்ட உலகக்கிண்ண தொடர் அடுத்த வருடம் இடம்பெறவுள்ள நிலையில் அதில் பங்கேற்கும் அணிகளைத் தெரிவு செய்வதற்காக ஒவ்வொரு கண்டங்களிலும் தகுதி காண் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் லத்தீன் அமெரிக்க கண்டத்திலிருந்து பங்கேற்க உள்ள அணிகளைத் தேர்வு செய்யும் போட்டிகள் தற்சமயம் இடம்பெற்று வருகின்றன. அதற்கமைய உருகுவே மற்றும் பொலிவியா அணிகளுக்கு இடையிலான போட்டி கோல் எதுவுமின்றி சமநிலையில் முடிந்ததால் நடப்புச் சம்பியனான லயனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்டினா அணி உலகக் கிண்ண தொடரில் தனது வரவை உறுதிப்படுத்திக் கொண்டது.

இதன்படி, ஆர்ஜென்டினா அணி 13 போட்டிகளில் 28 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

அடுத்த ஆண்டு ஜூன் 11 முதல் ஜூலை 19 வரை நடைபெறும் உலகக் கிண்ண தொடரை கனடா, மெக்சிகோ மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகள் ஒன்றிணைந்து நடாத்துகின்றது.

அதனால் தென் அமெரிக்காவிலிருந்து ஆறு நாடுகள் நேரடியாகத் தகுதி பெறுகின்றன. ஏழாவது இடத்தைப் பிடிக்கும் அணி இன்டர்காண்டி னென்டல் பிளேஆஃப்களில் விளையாட வேண்டும்.

உலகக் கிண்ண தொடரை நடத்தும் நாடுகளைத் தவிர, ஜப்பான், நியூசிலாந்து மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் ஏற்கனவே உலகக் கிண்ண தொடருக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து அணியிடம் மீண்டும் வீழ்ந்தது பாகிஸ்தான் அணி



பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் 73 ஓட்டங்களால் இலகு வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ரி20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் பங்கேற்றுள்ளது. இதில் முதலில் நிறைவுக்கு வந்த 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரை நியூசிலாந்து அணி 4:1 என கைப்பற்றி அசத்தியது.

இந்நிலையில் இலங்கை நேரப்படி நேற்று (29) அதிகாலை 3.30 மணிக்கு முதல் ஒருநாள் போட்டி நபியரில் ஆரம்பித்திருந்தது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதற்கமைய முதலில் துடுப்பாடிய நியூசிலாந்து அணிக்கு சப்மேன் பெற்றுக் கொடுத்த அசத்தலான சதம் கடந்த துடுப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 344 ஓட்டங்களை பெற்று கொண்டது. துடுப்பாட்டத்தில் சப்மேன் 134 ஓட்டங்களையும், மிச்சேல் மற்றும் முஹமட் அப்பாஸ் ஆகியோர் முறையே 76 மற்றும் 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் இர்பான் கான் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 345 என்ற மிகக் கடினமான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த பாகிஸ்தான் அணிக்கு முன்வரிசை வீரர்கள் பிரகாசித்த போதிலும் , மத்திய மற்றும் பின் வரிசை வீரர்கள் நிலைக்காமல் போக 44.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 271 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 73 ஓட்டங்களால் தோற்றுப் போனது. துடுப்பாட்டத்தில் பாபர் அஸாம் 78 ஓட்டங்களையும், சல்மான் அலி அஹா 58 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் நத்தன் ஸ்மித் 4 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

# ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியில் விளையாடி பாராட்டை பெற்ற கற்பிட்டி இஷ்ராத் ஹுஸைசன்

**(கற்பிட்டி செய்தியாளர் எம் எச் எம் சியாஜ்)**

ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் மூன்றாம் வருட மாணவராக கல்வி கற்று வரும் கற்பிட்டியைச் சேர்ந்த ஸாஹிர் இஷ்ராத் ஹுஸைசன் 2024 ம் ஆண்டுக்கான தேசிய பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியில் பங்கு





பற்றியதுடன் அணியின் வெற்றிக்கு பாடுபட்டவர்களின் பட்டியலில் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழக நிர்வாகத்தினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை யின் பழைய மாணவரும், கற்பிட்டி பேர்ல்ஸ் உதைபந்தாட்ட அணியின் வீரருமான இவர் கற்பிட்டியில் வசித்து வரும் முன்னாள் ஆசிரியர் ஸாஹீர் மற்றும் றஸீதா உம்மா தம்பதிகளின் புதல்வர்.

மேலும் இஷ்ராத் ஹுஸைசன் 2023 ஆண்டிலும் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் சிறந்த உதைபந்தாட்ட வீரர் என்ற பாட்டையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# ஓர்சட்வத்த முஸ்லிம் வித்தியாலயத்தில் அக்ஸா இல்லம் சம்பியன்

நிட்டம்புவ, ஹோரகொல்ல ஓர்சாட்வத்த முஸ்லிம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளின் நடப்பாண்டிற்கான நிகழ்வுகள் மிகச் சிறப்பாக இடம்பெற்று முடிந்தது. இதில் அக்ஸா இல்லம் முதலிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

நிட்டம்புவ, ஹோரகொல்ல எனும் அழகிய பிரதேசத்தில் மிக சிறிய ஒரு பாடசாலையான இப் பாடசாலையில் சுமார் 200 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இப்பாடசாலையின் அதிபராக A.W.அன்வர்டீனும், பிரதி அதிபராக M.A.S.J.இம்ரத் ஆகியோர் கடமையாற்றுகிறார்கள்.

17 ஆசிரியர்களை மாத்திரம் கொண்டு இயங்கும் இப்பாடசாலை வசதி வாய்ப்புகள் மிகவும் குறைவான பாடசாலையாகவே காணப்படுகின்றது. வகுப்பறைகள் கூட முறையாக காணப்படாத விடத்தும் மாணவர்களின் பெறு பேறுகள் சிறந்து விளங்குகின்றன.

கடந்த 2025.02.25 அன்று பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் மிக விமர்சையாக நடைபெற்றது.

இதில் இல்லங்களாக அக்ஸா, நபவி, ஹரம் எனும் இல்லங்கள் பங்கு பற்றியது. இந் நிகழ்வை சிறப்பாக நடத்த பாடசாலையின் ஆசிரியர் குழாம் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்போர் விடாமுயற்சியுடன் செயல்பட்டதுடன், ஊரின் நலன் விரும்பிகள் மற்று நன்கொடையாளர்கள் பலரும் உதவி புரிந்திருந்தனர்.

மாணவர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் இவர்களின் ஆதரவு வழங்கப்பட்டது. இவ் இல்ல விளையாட்டுப் போட்டியின் குறிப்பிடக்கூடிய அம்சமாக பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக இப் பாடசாலை மாணவர்களை கொண்ட பேன்ட் வாத்திய குழு (Band group) அமைக்கப்பட்டு இசைக்கவும் பட்டது.

இவ்வாத்திய குழுவுக்கு தேவையான உபகரணங்கள் sports and welfare, Thihariya நலன்புரி சங்கத்தின் தலைவர் அஜ்பர் வழங்கியிருந்தார்.

மேலும் காற்பந்தாட்டம், துடுப்பாட்டம், கூடைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், ஓட்டம், பாய்தல், குண்டு, பருதி வீசுதல் வினோத உடை போன்ற போட்டிகளும் நடைபெற்றன.

இவ்வில்ல விளையாட்டுப் போட்டியில் அக்ஸா இல்லம் முதலிடத்தை தட்டிக் கொண்டதுடன், நபவி இல்லம் இரண்டாம் இடத்தையும், ஹரம் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வின் கௌரவ அதிதியாக கல் எளிய நூர்டீன் டெக்ஸ் உரிமையாளரும் இப்பாடசாலையின் முன்னாள் ஆசிரியருமான நூர்டீன் யாக்கூப் கலந்து சிறப்பித்தார். மேலும் சக பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் நிகழ்வுகளில் பங்கு பற்றி தம் ஆதரவை வழங்கியதுடன், வலையக்கல்வி பணிமனையின் தமிழ் மொழி மூல ஆசிரிய ஆலோசர்கள் நடுவர்களாக கடமையாற்றி நிகழ்ச்சிகள் ஒழுங்கான முறையில் நடைபெற உதவி புரிந்தனர்.